இந்த இதழில்

	பக்கம்
தலையங்கம் :	
ஒருவருக்கும் உதவாத கட்டுப்பாடு ஒழியட்டும் ! ...	3
வெற்றிவாகை சூடுக ! ...	4
யு. எஸ். அணு மின்சார உற்பத்தி நிலையம் (படம்) ...	5
மாநில சங்கீத நாடக சங்கம் ...	6
அறிமுகம் : காப்டன் சந்தனத்தூள் ...	7
முன்னுக்கு வருபவர் ...	8
கவிதை : வள்ளுவர் ஈந்த பொருள் ...	22
இலக்கியம் : கண்புதைத்த காட்சி ! ...	15
கருப்பும், சிவப்பும் ! ...	13
தொடர்கதை : இணைந்த உள்ளங்கள் ...	9
கட்டுரைகள் :	
சந்திரமண்டல ஆராய்ச்சி ...	17
ஐந்தாண்டுத் திட்டங்கள் ! ...	19
தென்னாட்டின் நிலக்கரி நகர் ...	21
ராசிபலன் ...	25
சினிமா :	
பிள்ளைக் கனியமுது ...	28

An opportunity will be more convincing

FOR

Steel Structural Fabrications,

Gates, Grilles, Storage Tanks,

Ferrous & non-ferrous Castings.

CONTACT:

BUILDERS INDUSTRIES,

MECHANICAL & STRUCTURAL ENGINEERS

IRON & BRASS FOUNDERS,

33, WALLTAX ROAD, MADRAS-3.

தொழில் பத்திரிகை கிடைக்கும் இடங்கள்

ஜூன் 15 - தேதி " தொழில் " இதழிலிருந்து தொடர் கதை முதலிய புதிய அம்சங்கள் இடம் பெறுகின்றன. சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தவறாமல் " தொழில் " கிடைத்து வரும். வாசகர்கள் கீழே கண்டுள்ள முகவரிகளில் " தொழில் " இதழ்களை ஒழுங்காகப் பெறலாம்.

சென்னை

"தொழில்" அலுவலகம்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3

விக்டரி நியூஸ் மார்ட்,
விக்டரி ஹவுஸ்,
7/8 மவுண்ட்ரோட்
சென்னை-2

செங்கற்பட்டு ஜில்லா

N. A. L. விஸ்வநாதம் செட்டியார்,
சிக்கராயபுரம்,
குன்றத்தூர் போஸ்டு
பூந்தமல்லி மார்க்கம்

K. N. சம்மந்தம்
குலாலர்தெரு,
கண்டோன்மெண்டு
பூந்தமல்லி.

சேலம் ஜில்லா

T. M. சுப்ரமணிய ஆச்சாரி,
மணியம் இண்டஸ்ரீஸ்,
சங்கரி ரோடு,
திருச்செங்கோடு,

M. A. வஹாப்
V. O. C. மார்கெட்,
சேலம்-1.

வட ஆற்காடு ஜில்லா

K. மோகன முதலியார்,
ஸ்டார் டிரங் ஒர்க்ஸ்,
32, லாங்கு பஜார்,
வேலூர்.

தென் ஆற்காடு ஜில்லா

வரகூர் K. முத்துகுமாரசாமி
2, போல் நாராயணபிள்ளை
தெரு,
சிதம்பரம்

P. S. தண்டபாணி
1742, வண்டிப்பாளையம்
கூடலூர்.

திருச்சி ஜில்லா

ஜனாப் P. H. முகமது நஸிருதீன்,
57, பாலக்கரை ரோடு,
திருச்சி-8.

T. P. வேலு பிள்ளை
டிரங்க் பாக்ஸ் ஷாப்
திருச்சி-2

B. முகமது இஸ்மாயில்
முஸ்தபா மார்ட்,
புதுக்கோட்டை.

கோயம்புத்தூர் ஜில்லா

D. குழந்தை சாமி
13/367 மில் ரோடு
கோயம்புத்தூர்.

K. P. பரசுராம் பிள்ளை
77, S. S. கோயில் தெருவு,
பொள்ளாச்சி.

P. கன்னிமுத்து
கௌன்சிலர்,
பாய் மண்டி
பல்லடம் ரோடு,
திருப்பூர்.

மதுரை ஜில்லா

S. சூரியநாராயணன்
12, அரசமரம் பூக்காரச்சந்து,
தானப்ப முதலி தெரு,
மதுரை.

M. கருப்பணன்
லக்ஷிமி ஸ்டீல்டிரங்க் ஒர்க்ஸ்
99, மெயின் ரோடு,
திண்டுக்கல்

திரு. M. T. மாரியப்பன்
திருநீலகண்டர் வீதி,
பழனி.

இராமநாதபுரம் ஜில்லா

K. C. இராமசாமி
தட்டுமேட்டுத் தெரு
சிவகாசி.

ஸ்ரீ ராமகிருஷ்ணு & கோ,
விருதுநகர்

திருநெல்வேலி ஜில்லா

P. கருப்புசாமி வேளார்
32, கதிரேசன் கோயில்
தெரு,
தூத்துக்குடி

காரியதரிசி,
வாவாநக்ரம் குலால்
கூட்டுறவு, உற்பத்தி
விற்பனை சங்கம்
லிமிடெட், வடகரை
P. O. தென்காசி
தாலுக்கா

வெடிகுண்டு T. S. முத்துசாமி
25, பழனித் தெரு
திருநெல்வேலி

புது டில்லி

P. கிருஷ்ணமூர்த்தி ஐயர்
ஷாப் நெ.
28-B. கான் மார்கெட்,
நியூ டெல்லி.

C. V. பாண்டியன்,
முருகன் ஸ்டோர்ஸ்,
கங்காராம் பில்டிங்ஸ்,
ஆஜ்மல் கான்ரோடு,
கரோல் பாக்,
நியூ டெல்லி.

இலங்கை

V. S. நடராஜா
241, K. K. S. ரோடு,
ஜாப்னு (Jafna)
கொழும்பு.

பாண்டிச்சேரி

M/s. P. R. & சன்ஸ்
டியூப்ளக்ஸ் ரோடு,
பாண்டிச்சேரி.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 15—6—58	இதழ் 4

ஒருவருக்கும் உதவாத கட்டுப்பாடு ஒழியட்டும்!

சென்னை ராஜ்யத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட, இரும்பு—எஃகு சாமான்கள் தயாரிப்பவர்களுக்கு இரும்பு, எஃகு கிடைப்பது மிகவும் கடினமாக இருந்து வருகிறது. இது ராஜ்ய சர்க்கார் அதிகாரிகளுக்கு நன்கு தெரியும்.

சிறு தொழில் செய்யும் பட்டறைக்காரருக்கு உற்பத்திக் கேற்றவாறு 'பர்மிட்' வழங்குவதில் அடிஷனல் டைரக்டர் ஆபீஸில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. சுமார் 10 ஆண்டுகளாக உற்பத்தியாளர்கள் பலவிதத்திலும் ஆலோசனைகள் சொல்லியும், அதிகாரிகள் ஏன் கவனிக்க முடியவில்லை? மத்திய சர்க்கார் போதுமான அளவு இரும்பு, எஃகு ஒதுக்குவதில்லை என்று அதிகாரிகள் சொல்கின்றனர். கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன சமாதானம் இது!

சிறு சிறு பட்டறைகள் வைத்து சாமான்கள் உற்பத்தி செய்பவர்கள் உண்மையிலேயே வேதனை அடைகின்றனர்கள். எத்தனை மகாநாடுகள், எத்தனை தூது கோஷ்டிகள், எத்தனை மனுக்கள்—மகஜர்கள்?; பலன், ஒன்றுமில்லை! விரைவில் விமோசனம் இல்லை என்று அறிந்த பிறகு திருச்சியில் 17—5—58ல் நடந்த ராஜ்ய இரும்பு சாமான்கள் உற்பத்தியாளர் சங்க நிர்வாகக் கமிட்டியில் இரும்பு எஃகு கட்டுப்பாடு எடுபட வேண்டும் என்று ஏக மனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது; சென்னை சர்க்காருக்கும் அது அனுப்பப்பட்டுள்ளது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா? 'அலாட்மெண்டு' கொடுக்க வேண்டும், அல்லது கண்ட்ரோலை எடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்துமாறு ராஜ்ய சர்க்காரை வேண்டுகின்றோம்.

சென்னை ராஜ்யத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் கட்டுப்பாடு வருவதற்கு முன்பே வழக்கமாக இத்தொழிலை நம்பி வாழ்ந்தவர்கள். இவர்களுக்கு ஒவ்வொரு தடவையும் ஒதுக்கப்படும் 'கோட்டா' மிகவும் சொற்பம். யானைப் பசிக்கு சோளப்பொறி! ஆனால் இடையில் தொழில் தொடங்கியவர்களுக்கு மட்டும் பலவேறு புதுப் பிரிவுகளை ஏற்படுத்தி, அதிகமாக 'கோட்டா' ஒதுக்கப்படுகிறது; இது நியாயமல்ல.

வாலாயமாகத் தொழில் செய்துவந்தவர்கள் வயிற்றில் அடித்துவிட்டு, இடையில் வந்தவர்களுக்கு விருந்துபசாரம்! கட்டுப்பாடு இருப்பதால் தான் போட்டாப்

வெற்றி வாகை சூடுக!

புலிக்குப் பிறந்தது பூனையாகாது! இந்திய அரசாங்க முன்னாள் பாதுகாப்பு மந்திரி மறைந்த பெரியார் ஸ்ரீ. என். கோபாலசுவாமி ஐயங்காரின் குமாரர் ஸ்ரீ. ஜி. பார்த்தசாரதி, சீன மக்கள் குடியரசுக்கு இந்தியாவின் தூதராகச் செல்கிறார். இது அவருக்குப் புதிய பணியல்ல. ஏற்கனவே இந்தோனேஷியாவில் இந்தியாவின் தூதராகச் சிறந்த சேவை செய்தவர். இந்தோ-சீனாவில் போர் நின்று அமைதி நிலவ அரும் பணி ஆற்றியவர். சிறந்த பத்திரிகையாளர்; செயல் வீரரும் கூட. வயதில் இளைஞராயினும் ஆற்றலில் முதியவர். சீன நாட்டில் அவர் பணி சிறந்தோங்க 'வாகை சூடுக!' என்று வாழ்த்துகிறோம்.

போட்டி; லாபமடிக்கும் மனப்பான்மை. எனவே, கட்டுப்பாட்டை எடுத்து விட்ட பிறகு பரம்பரையாக இத்தொழிலைச் செய்பவர்கள் மட்டுமே இருப்பார்கள் ஆனல் இடையில் வந்தவர்கள் இடையிலேயே மறைந்து விடுவார்கள்.

நிரந்தரமாக இத்தொழிலை நம்பி இருப்பவர்கள் வாழ்வதற்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை!

எவ்விதமான பாகுபாடுகளும் இல்லாமல் தொழில் வளர வேண்டும்; யார் வேண்டுமானலும் தேவைக்கு ஏற்றவாறு உற்பத்தியாளர்களிடமிருந்தோ அல்லது மொத்த வியாபாரிகளிடமிருந்தோ நேரடியாக இரும்பு-எஃகு கொள்முதல் செய்து கொள்ள வசதி வேண்டும். இரும்பு-எஃகுக்கு என்று ஒரு தனி இலாகா இருப்பது ஒழியும். பொதுமக்களின் பணமும் மிச்சப்படும்.

உணவு கட்டுப்பாடு எடு ட்ட பின்பு நாட்டில் எத்தனை இன்னல்கள், தொல்லைகள் தொலைந்தன? இந்நிலைமை இரும்பு, எஃகு விஷயத்திலும் பொருந்தும்.

சிறு தொழில் நடத்துபவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் தேவைக்கு ஏற்றவாறு அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள தாராளமாக இந்திய சர்க்கார் லைசென்ஸ் வழங்கவேண்டும். பெரிய பெரிய ஆலைகள் தம் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சர்க்கார் லைசென்சுகள் வழங்காமலா இருக்கிரூர்கள்? இரும்பு கட்டுப்பாடு ரத்தாவதினல் ஒன்றும் 'குடி முழுகி' விடாது. உணவு, துணி கட்டுப்பாடுகள் ரத்தான பின்பு நாட்டில் ஏற்பட்டுள்ள நல்ல நிலைமையே இதற்குப் போதிய சான்று. துணிச்சலுடன் சர்க்கார் செயலாற்ற முன் வருவார்களா?

———

144849

எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள்

சென்னை ராஜ்யத்தில் 1958 மார்ச் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு 49,235 பேர் பதிவு செய்து கொண்டனர். 47016 பேர் பரீட்சை எழுதினர். 26986 பேர் தேறினர். அதாவது தேறியவாகள் 57.4 சதவிகிதம்.

எழுதி அனுப்புங்கள்!

●

வர்த்தகம், பல வேறு தொழில்கள் பற்றிய கட்டுரைகளை "தொழில்" வரவேற்கிறது. வர்த்தக சபைகள், தொழில் சங்கங்களின் கூட்டங்கள், மகாநாடுகள், தீர்மானங்கள் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பினல் வெளியிடுவோம். முடிந்த வரையில் தமிழிலேயே செய்திகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிரும்.

அரசியல், இலக்கியம், கலை பற்றிய கட்டுரைகளும், புகைப் படங்களும் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள், கதைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றையும் மகிழ்ச்சியுடன் "தொழில்" வெளியிடும்.

எழுதி அனுப்புங்கள்; பிரசுரிக்கிரும்!

கலையகம்—ஓர் அற நிலையம்

வாழ்வித்து வாழ்க — அதன் குறிக்கோள்

நாடக, சினிமா நடிப்புப் பயிற்சி இலவசமாக அளிப்பது கலையகத்தின் இலட்சிய சேவைகளில் ஒன்று.

விவரத்துக்கு, முகவரியுடன் கூடிய அஞ்சல் உரை அனுப்பவும்,

டைரக்டர்.

கலையகம்.

15/3 வைகுந்தபுரம் தெரு—சென்னை-17.

யு. எஸ். அணு மின்சார உற்பத்திசாலை



ஷிப்பிங்போர்ட்டில் உள்ள அணு மின்சார உற்பத்திசாலை அணு உலையின் உட்பகுதி. அந்த உற்பத்தி சாலையை ஜனாதிபதி ஐஸன்ஹோவர் திறந்து வைக்குமுன் உலை பொருத்தப்படுவதைப் படத்தில் பார்க்கிறோம். இந்த அணு உலையின் எடை 58 டன். இதற்குக் கோடிக்கணக்கில் டாலர்கள் செலவாகியுள்ளது.

மாநில சங்கீத நாடக சங்கம்

—✲—

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் மேலும் மூன்று மாதங்களுக்கும் மாநில சங்கீத நாடக சங்கத்தின் தலைவராக அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று மாதங்களுக்கு, கீழ்க்கண்டவர்கள் சங்கத்தின் பொதுக்குழுவுக்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்:- ஸ்ரீமான்கள் வி. சி. கோபாலரத்தினம், எம். பி. பெரியசாமி தூரன்; எஸ். வெங்கடேஸ்வரன்; டி. எம். நாராயணசாமி பிள்ளை; ஆர். பி. சேதுப்பிள்ளை, சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை; சங்கீத கலாநிதி முசிரி சுப்பிரமணிய அய்யர்; டாக்டர் வி. ராகவன்; ராஜா சர் முத்தையா செட்டியார்; ஸ்ரீமான்கள் கோபிநாத், கே. சந்திரசேகரன்; டி. கே. சண்முகம்; ப. சம்பந்த முதலியார்; எஸ். எஸ். வாசன்; பி. என். ரெட்டி; இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்; சங்கீதபூபதி, சங்கீதகலாநிதி மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர்; நாட்டிய கலா கேசரி வழுவூர் ராமையா பிள்ளை; ஸ்ரீமதி பாலசரஸ்வதி; நகைச்சுவைச் செல்வன் டி. என். சிவதாணு; ஸ்ரீமான்கள் எஸ். டி. சுந்தரம், வி நாகையா; பி. சாம்பமூர்த்தி; வித்வான் திருவீழிமழலை சுப்பிரமணிய பிள்ளை; வித்வான் பாலக்காட்டுமணி ஐயர்; ஸ்ரீமதி சி. சரஸ்வதி பாய்; ஸ்ரீ டி. கே. சந்து பணிக்கர்.

வெற்றிலை உற்பத்தியாளர் மகாநாடு

—✲—

சென்னை ராஜ்ய வெற்றிலை உற்பத்தி, விற்பனையாளர் 3வது மாகாண மகாநாடு ஜூலை முதல் வாரத்தில் திருநெல்வேலியில் நடைபெறும். வெற்றிலைக்கு மீண்டும் விற்பனைவரி, ரயில்வே மூலமான வெற்றிலை போக்குவரத்து, வெளிநாட்டு ஏற்றுமதி, உற்பத்தியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் ஆகியவைகளை மகாநாடு பரிசீலனை செய்யும். மகாநாட்டை வெற்றிகரமாக நடத்த ஸ்ரீ. கே. ஏ. முகம்மது ஆஜம் சாயபு தலைவராகவும், ஸ்ரீ. பி. சுடலை போர்த்தி நாடார், ஸ்ரீ. ஆ. பிச்சையயா முதலியார், ஸ்ரீ. ம. நாகப்ப பிள்ளை, ஸ்ரீ. எம். எம். பழனிசாமிப் பிள்ளை ஆகியோர் உப தலைவர்களாகவும் ஸ்ரீ. எஸ். சூரிய நாராயணன் பொதுக்காரிய தரிசியாகவும் ஸ்ரீ. எம். சுப்பையா மூப்பனார். ஸ்ரீ. ஏ. பிச்சமுத்து, ஸ்ரீ. செல்லையா மூப்பனர் ஸ்ரீ. கோ. இசக்கி மூப்பனர் ஆகியோர் காரியதரிசிகளாகவும். ஸ்ரீ. ஏ. டி. அப்துல் கபூர் சாயபு பொக்கிஷதாராகவும் ஸ்ரீ. எஸ். எம். மாணிக்க வாசகம் பிள்ளை உள்பட 26 பேர் மெம்பர்களாகவும் கொண்ட வரவேற்புக்கமிட்டியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

——

மீனவர்களுக்கு கடன் உதவி

நடப்பு நிதி ஆண்டில் 6 கரையோர மாவட்டங்களிலும் மேட்டூர் அணையிலும் நிறுவப்பட்ட 20 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு நீண்ட கால கடன் வழங்க ரூ. 2,80,000 செலவிட அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்தக் கடன் வசதியுடன் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, பழைய கடன்களைத் தீர்க்கவும், மீன்பிடி கருவிகளை வாங்கவும் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 400 வீதம் சர்க்கார் கடன் வழங்கும். சங்கங்கள் 10 ஆண்டுகளில் கடனை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுத்துவிடும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

இதுபோக உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் ரூ.40,000 அனுமதித்துள்ளது. தனது உறுப்பினர்களுக்கு, நபருக்கு ரூ. 200 வீதம் நடுத்தரக்கால கடன் வழங்குவதற்காக இந்தப் பணம் தரப்படுகிறது.

——

பல மொழிகளில் செய்திக்கதிர்

இந்திய சர்க்கார் திரைப்படப் பிரிவினரால் வெளியிடப்பட்டு வரும்வரலாற்று படங்களை, அதிகப்படியாக இன்னும் எட்டு பாஷைகளில்—அஸ்ஸாமி, குஜராத்தி, கன்னடம், காஷ்மீர், மலையாளம், மராத்தி, ஒரிஸா, பஞ்சாபி ஆகிய மொழிகளில்--வெளியிட இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். ஏற்கனவே அப்படங்கள் ஐந்து பாஷைகளில் வெளியிடப்படுகின்றன.

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும்பண்டங்கள் பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பண்டங்கள்மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம். "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை," என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

காப்டன் சந்தனத் தூள்

கோடைக் கடும் வெயிலின் கொடுமையைக் குறைப்பது சந்தனமும், நன்னாரியுமே. நன்னாரி உள்ளுக்குச் சாப்பிடச் சிறந்தது; சந்தனம் உடலிற் பூசிக்கொள்ள உகந்தது.

தூய்ய சந்தனத்தூள் தயாரிப்பு காப்டன் முகப்பவுடர் சுண்ணம்புத்தூளை முகப்பவுடராகப் பூசி முகத்தின் அழகைக் கெடுத்துக்கொள்ளாமல் காப்டன் சந்தனத் தூள் உபயோகித்து வந்தால் முகம் பொன் நிறம் எய்துகிறது. ஆம்! சுவருக்கு வெள்ளையடித்தாற்போல பவுடர் பூசுவது அழகல்ல. தமிழ் நாட்டின் பண்புக்கு ஒப்ப, உடலின் இயற்கை நிறத்தை ஒட்டிய சந்தனத்தூள் பூசிக்கொள்வதே சிறப்பு. என்றும் இளமையுடனிருக்க சந்தனத்தூள் முகத்தில் பூசிக்கொள்க! காப்டன் சந்தனத்தூள் சாலச் சிறந்தது.

கடும் கோடையின் போது, காப்டன் சந்தனத்தூளில் இரு சிட்டிகைகள் எடுத்து அரை அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து உடலில் பூசினால் உடல் மணக்கும். உள்ளம் குளிரும் உஷ்ணம் தணியும். வேர்க்குரு, வேனல் கட்டி ஓடி ஒளியும்!

அந்நிய நாட்டுச் சுண்ணம்புத்தூளுக்கு காசைக் கொட்டி, குழந்தைகளின் பட்டுப்போன்ற மேனியைக் கெடுக்க வேண்டாம். காப்டன் சந்தனத்தூள் மலர் போன்ற மேனிக்கென்றே தயாரிக்கப் படுகிறது. பிறந்த குழந்தை முதல் பெரிய தாத்தா வரை யாரும் காப்டன் சந்தனத் தூள் உபயோகிக்கலாம். அதன் நறுமணத்துக்கு ஈடுகிடையாது. திறந்து போட்டு விட்டாலும் கூட அதன் மணம் குன்றுவதில்லை. 'அகில் மணம் குன்றாது' என்பது தமிழ் மூதுரை அல்லவா?

தோல் வியாதிகள் வராமல் தடுக்கவும் காப்டன் சந்தனத்தூள் கைகண்ட தடுப்புச் சாதனம். எங்கும் கிடைக்கும்-எங்காவது கிடைக்கவில்லையானால் "தொழில்" ஆசிரியருக்கு எழுதுங்கள்; பின்பு கட்டாயம் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்;

M. K. AZEEZ & Son,

வாசனைத்திரவிய வியாபாரிகள்,

மேலக் கோபுரத் தெரு, மதுரை.

நன்னாரி சர்பத் செய்யும் முறை

ஒரு பலம் இடித்த நன்னாரி வேரைக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டு, ஐந்து பலம் வெந்நீரில் கொதிக்கும்போது போட்டு, நான்கு முதல் ஐந்து மணி நேரம் நன்றாக ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டி, அந்தத் தெளிநீரில் ஏழுபலம் வெள்ளைச் சர்க்கரை கூட்டி ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பிலேற்றிக் காய்ச்சப் பாகுபதம் வரும்; அதனை இறக்கிக் கண்ணாடிப் புட்டிகளில் ஊற்றி வைத்து உபயோகிக்கலாம்.

செவிடர்களுக்கு உதவி

செவிடர்கள், ஊமையர்கள் க்ஷேமநல வேலைகளில் ஈடுபட்டுள்ள 27 ஸ்தாபனங்களுக்கு மத்திய சமூக க்ஷேமநல ஸ்தாபனத்திடமிருந்து 1958 மார்ச் வரை நிதி உதவி அடைத்திருக்கிறது.

இதுதவிர, 1957-58ம் மத்திய கல்வி இலாகாவிலிருந்து செவிடர் ஊமையர்களுக்கான ஆறு ஸ்தாபனங்களுக்கு ரூ. 30,15,000 மானியம்கிடைத்திருக்கிறது.

முன்னுக்கு வருபவர்!



புதுவை தங்கராசு

தொழில் முறையில் நடிகர் அல்ல; ஆனால் நடிப்பில் பற்றுதலும், ஆர்வமும். திறமையும் படைத்தவர். எடுப்பான தோற்றமுடைய இளைஞர். கவர்ச்சி மிக்க 'முகவெட்டு' படைத்தவர்.

சிந்தாதிரிப்பேட்டை. வ. உ. சி. மன்ற ஆண்டு விழாவின்போது, கிரேக்கப் பேரறிஞர் சாக்ரட்டீஸ் சிறையில் நச்சுண்டு, அணு அணுவாக மடியும் காட்சியை நடித்தார். அவரது சிறந்த நடிப்பையும் வெண்கல மணி போன்ற குரலையும், சொல் சுத்தமான உரையாடல்களையும் பாராட்டாதவர் இல்லை. 'சாக்ரட்டீஸ்' தங்கராசு என்ற புகழுக்குப் பாத்திரமானார்.

பின்பு ஒரு முறை, பாஞ்சை மன்னன் கட்டபொம்மன் பாத்திரத்தில் வந்து, முன்பு மத்திய சர்க்கார் நிதி மந்திரியாக இருந்த ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களின் பாராட்டுகளைப் பெற்றார்.

வாஹினி ஸ்தாபனத்தார் நடத்திய நடிப்புப் போட்டியில் வெற்றிபெற்றவர்.

இளைஞரான தங்கராசுக்கு நடிப்பு உலகில் நல்ல வாய்ப்பு இருக்கிறது. 'புதுமுகம்' வேண்டும் என்று தேடி அலைபவர்களுக்கு தங்கராசு ஒரு தங்கச் சுரங்கம். அவர் முகவரி: 1-35, வீரபத்திர ஆசாரி தெரு, புதுப்பேட்டை, சென்னை-2.

———

இ. தே. ஜ. காங்கிரஸ் மாநில கட்சியாக அங்கீகாரம்

சென்னை மாநிலத்தில், இந்திய தேசிய ஜனநாயக காங்கிர, மாநில காட்சிகளில் ஒன்றாக, தேர்தல் கமிஷன் இப்பொழுது அங்கீகரித்துள்ளது. ஏற்கனவே, திராவிட முன்னேற்ற கழகம், மாநில கட்சிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் பார்லிமெண்டர் தொகுதிகளிலும், அசெம்பிலி தொகுதிகளிலும் தேர்தலில் பயன் படுத்துவதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட சின்னங்களின் ஜாபிதா வருமாறு:—

நுகத்தில் பூட்டப்பட்ட ஒரு காளைகள், குடிசை, கதிர் அரிவாள், விளக்கு, நிற்கும் சிங்கம், மனிதன் கை, குதிரை வீரன், உதய சூரியன், யானை, மண்வெட்டியுடனுள்ள ஆள். தானியம் தூற்றும் விவசாயி, சைக்கிள் வண்டி, குடம், ஏணி, சேவல், வில்லும் அம்பும், மரம், நட்சத்திரம், படகு, பூ, தராசு, ஒட்டகம், இரு இலைகளுடன் உள்ள கிளை, இந்திய தேசிய ஜனநாயக காங்கிரசுக்கு யானை சின்னம் தரப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகத்தின் சின்னம் உதய சூரியன், மேலே குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களாக இருந்தாலெழிய, மாநிலத்தில் எந்தத் தொகுதியிலும் நிற்பவர்கள் இந்தக் குறிப்பிட்ட இரு சின்னங்களைக் கேட்க முடியாது.

———

பெங்களூர், இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம்

உயர்தரக் கல்வி ஸ்தாபனங்களுள் ஒன்றான பெங்களூர் இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் சர்வகலாசாலை மான்யங்கள் கமிஷன் சட்ட விவகாரங்களைப் பொறுத்த மட்டில் ஒரு சர்வகலாசாலையாகப் பாவிக்கப்படுமென்று சர்வகலாசாலை மான்யங்கள் கமிஷன் யோசனையின் பேரில் மத்திய சர்க்கார், அறிவித்துள்ளனர்.

ஆராய்ச்சிக் கழகம் இனி சர்வகலாசாலை மான்யங்கள் கமிஷனிடமிருந்து மான்யங்களைப் பெறுவதற்கு அருகதை பெறுகிறது.

———

கைத்தறி மூலமாக வருஷமொன்றுக்கு 150 கோடி கஜம் அதாவது மொத்த ஜவுளி ஆலை உற்பத்தியில் மூன்றிலொரு பங்கு கிடைக்கிறது. கைத்தறித் துறைக்கென்று சில வகைத் துணிகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. சாயம் தோய்த்த சேலைகள், அரை அங்குலக் கரைபோட்ட வேட்டிகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், லுங்கிகள், மேஜை விரிப்புகள், டர்க்கி டவல்கள், சமக்காளங்கள் முதலிய ரகங்கள் இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளன.

தொடர் கதை:

—புலவர் நா. தேவநாதன்—

கதையில் வருபவர்கள்

★

ஆண்கள்:

செல்வநம்பி	—	கதா நாயகன்
சேதுபதி	—	,, நண்பன்
கனகராசன்	—	மருதமுத்துவின் மகன்
மருதமுத்துப்பிள்ளை	—	செல்வந்தர்
தென்றல்	—	சிவராமலிங்கத்தின் மகள்
முனியன்	—	வேலைக்காரன்
சிவராமலிங்கம்	—	பொன்னியின் அண்ணன்
வேணு	—	,, மகன்
பொன்னுசாமி முதலியார்		,, கணவன்.

பெண்கள்:

கலாவதி	—	கதாநாயகி
முல்லை	—	மருதமுத்துவின் வளர்ப்புப் பெண்
பொன்னியம்மாள்		செல்வநம்பியின் தாய்
பவானி	—	கொடியவள்
நீலா	—	சிவராமலிங்கம் மகள்

குறிப்பு:—இவர்களுள் சிலர் தாம் முக்கிய பாத்திரங்கள்.

1. கண்ணீர்த்துளிகள்!

அமைதி! எங்கும் ஒரே அமைதி! மூச்சு விடும் ஓசை தவிர வேறு எந்த வகை ஓசையும் கேட்கவில்லை. மணி 'டங்...... டங்......' என்று தொடர்ந்து 12 தடவை அடித்தது. சிறிது அமைதி. ஜன்னல் வழியாக மின்னல் விட்டு விட்டு மின்னுகிறது. வானத்தில் கருமை! காற்றின் சுழற்சி! அமைதி இழந்து கொண்டே வருகிறது! இடி இடித்துக் கொண்டே இருக்கிறது! சிறு சிறு தூரல்கள் சிறிது வளர்ந்து பெரிதாகி 'சோ' வென்று பெய்கின்றன. இது போலத்தான்—அமைதியோடிருந்து அமைதி இழந்த வடிவம் ஒன்று அந்த சிறிய வீட்டுக்குள் அப்படியும் இப்படியும் திரிந்து கொண்டுள்ளது. மின்னல் வெளிச்சத்தில் அதன் வடிவம் தோன்றித் தோன்றி மறைகிறது. ஏன் அவ்வாறு சுற்றுகிறது? யார் அது? என்பதைப் பார்ப்போம். 'வாழ்வு பெரிது - சிறந்தது—வேண்டுவது' என்று எண்ணுகின்றவர்கட்கு அவ்வாறே உயர்ந்து அமைகிறது.

'அற்பமானது—நிலையில்லாதது—அழுக்குள்ளமேனியில் அடைந்துள்ள உயிர், புழுக்கறை புகுந்தவன் போல் தவிக்கிறது. இதற்கென்ன இன்பம்—என்று எண்ணி வாழ்க்கையை அற்பமாக நினைக்கிறவர்களுக்கு அற்பமாகத்தான் அமைகிறது. எதையும் அற்பமாக நினைப்பது சோம்பலின் சகோதரத் தன்மை. அருமையாக நினைப்பது அறிவுடைமையின் தன்மை. வாழப்பிறந்த ஒவ்வொருவனும் எதிர்ப்பார்ப்பது 'வாழ்வது

எப்படி'? என்ற வினாவிற்கு விடை தானே. இந்த வினாவை எழுப்பிக்கொண்டே இந்தப் படுக்கையில் இருந்த கம்பீரமான வடிவம் எழுந்து உட்கார்ந்தது. உலக வெளியிலே அமைதிதான். உள்ளத்திலோ கடுமையான புயல்கள் வீசுகின்றன. உழைத்து, அலுத்து ஓய்ந்து உறங்க முற்பட்ட அக்கால்களில் குளிரைப்போக்க போர்வையும் இல்லை; குளிரில் நடுங்குகின்றன. கைகள் இரண்டும் கம்பளியின் இரண்டு முனைகளையும் பிடித்துக் கொண்டு, கன்னங்களில்குவித்துக்கொண்டு கம்மென்றிருந்தன. வட்டமும் கிழிசலும் கொண்ட, எட்டியும் எட்டாத கரித்துண்டு போன்ற அந்தக் கம்பளி, குளிரைப் போக்குவது எப்படி? கால் பெருவிரலையும், காதையும் மறைத்தால் தானே குளிரும் அந்த உடலை விட்டு மறையும்! உடல் இவ்வாறு குளிரோடு போராடுகிறது. உள்ளம் வாழ்க்கையோடு போராடுகின்றது.

அந்த வாலிப வடிவம், படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்த சிறிது நேரத்தில், உடல் நடுக்கத்தைப் போக்கப் பாடுபட்டது. துன்பச்சுழலில் சிக்கித்தவிக்கும் அந்த உயிரை — உள்ளத்தை — வாழ்க்கைப் புயல் அலைக்கத் தொடங்கியது. உள்ளத்தில் எண்ணமாகிய கரிய — இருண்ட மேகங்கள் ஒன்றோடொன்று மோதுகின்றன; அறிவு ஒளியாகிய மேகங்கள் மோதலுக்குப்பின் வெண்மையான - தூய்மையான நீர்த்துளிகள் சொட்டி வழிகின்றன. ஒளி மிக்க மின்னலுடன் அதிர்ச்சி மிக்க இடி முழக்கும் முழங்குகின்றது. கரடுமுரடான முடிவு தெரியாத எண்ணங்களின் மோதலுக்குப் பின் சிறந்த - உயர்ந்த எண்ணங்களின் துணிவுகள் தங்குகின்றன: அறிவு ஒளியுடன் அஞ்சா நெஞ்சம் கர்ஜனை செய்து கொண்டு துணிவுடன் வந்து சேருகின்றது. உள்ளத்திலே இவ்வளவும் நிகழ்ந்து கொண்டிருந்தால், உடல் தன் தொழிலைச் செய்ய, மனம் இடம் கொடுத்தால் தானே! எல்லா உறுப்புகளும் அசைவற்று நின்று விட்டன. குளிரில் நடுங்கிய கால்களும் நடுங்கவில்லை; குவிந்திருந்த கைகளும் நடுங்கவில்லை! பொலிவு இல்லாத அந்தக் கண்கள் போக்கிய பார்வை எங்கே என்று தெரியவில்லை! உள்ளம் என்னும் நங்கை, கண்கள் என்னும் ஜன்னல் வழியாக உலகத் தெருவில் செல்லும் உயர்ந்த வாழ்வுக் காதலனைத் தேடுகிறாள். கண்கள் இமைக்கவில்லை, ஆஹா! மனிதனுக்கு வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை எவ்வளவு பெரியது! ஆம் வாழ்வு பெரியது! வாழ்வதற்காக அமைந்தது என்று எண்ணுகிறான். அவன் சிந்திப்பதில் என்ன தவறு இருக்கிறது?

அந்தக் கட்டிலின் மீதிருந்த செல்வநம்பி எழுந்து கொண்டான். இன்று தான் இவனுடைய சிந்தனை இவ்வாறு சென்றதா? இல்லை; பல நாட்களாகச் சிந்தித்தது. முடிவுக்கு வராத சிந்தனையால் முடிவது ஒன்றும் இல்லை. சிந்தனையின் முடிவு துணிவு தான். கால தாமதம் செய்தால் துணிவும் கூட, காய்ந்து ஆறிய நீர்போல் மறைந்து விடும். உடனே, அந்த இடத்தை விட்டுப் புறப்பட வேண்டும் என்று எண்ணினான் அவன்.

மங்கலான விளக்கு ஒளியிலே அன்பின் ஒளிவீசும் அன்னையின் முகத்தை உற்று உற்றுப் பார்த்தான்; சிறிது அயர்ச்சி அடைந்தான். மீண்டும் துணிந்தான். கால்கள் அக்கட்டில் ஓரத்திலே மெல்ல மெல்ல அடி வைத்துக்கொண்டிருந்தது. அவன் கண்கள் சூடான' நீரைக் கொட்டிக் கொண்டிருந்தன. செல்வ நம்பி; அன்னையின் பக்கத்தில் சென்று நின்றான். 'எப்படி என் அருமை அன்னையை விட்டுப் பிரிவேன்! ஐயோ! பிரியாமல் இருந்தாலும் காப்பாற்றத்தான் என்னால் முடியுமா! வறுமை வாழ்வைப் பிரிக்கிறது: நரகத்தில் தள்ளுகிறது; அன்பை அறுக்கிறது; உயிரை வதைக்கிறது: படித்தவரெல்லாம் பேனாவைக் கொண்டு வாழ நினைத்தால், பயிர்த்தொழில் செய்வது யார்? பேனாவைப் பிடிக்கும் கையிலே ஏர்க்கலப்பையைப் பிடித்தால் தான் நாடு நலம் பெறும்" என்று நாட்டுச் சீர்திருத்தவாதிகள் கூறினார்கள். நானும் நாட்டின் நலம் கருதி-வீட்டின் நிலை கருதி-பேனாமுனையை எறிந்து ஏர் முனையைக் கொண்டேன். உழவன் உழுது விளைவித்துக் கொடுத்ததை உண்டவரெல்லாம் உழவனுக்கு என்ன உதவி செய்கிறார்கள்? இக்குடும்பம் முழுவதும் உழைக்கிறது; இரவில் பசியோடு படுக்கிறது: அதிக விலைக்கு விற்க வேண்டும் என்று எஜமான் 1000 மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கிறான்; அரை மூட்டை கேட்டாலும் விளைவித்துக் கொடுத்த எங்களுக்குக் கொடுக்க மறுக்கிறான். உழவுத் தொழில்! நல்ல உழவுத் தொழில்! என் வீட்டுப் பசி நீங்கினால் தானே நாட்டின் நன்மைக்காக வாழ முடியும். நிலையான வாழ்வு தேடி என் வீட்டுப் பசியைப் போக்கினாலொழிய நாட்டுப் பற்று எனக்கு உண்டாகாது. உயர்ந்த செல்வம் உடைய

வர்களே உழவுத்தொழில் செய்து நாட்டுத் தொண்டர்களாகட்டும். நலிந்து வாழ்பவனுக்குள்ள நாட்டுப் பற்று நசுக்கப்படுகிறது! உயர்ந்து வாழ்பவன் ஏய்த்துப் பிழைத்து ஒரு மடம் கட்டி விட்டால் ஊரில் புகழப் படுகிறான்; உலகோரால் நாட்டுப் பற்றுடையவர்களில் ஒருவனாகச் சேர்க்கப் படுகிறான். 'உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து உயர்ந்து வாழலாம்' என்று எண்ணினேன். உழவுத் தொழிலில் சேர்ந்து உயர்ந்த நாட்டுப் பற்றுடையவன் என்று பெயர் எடுக்க எண்ணினேன். இத்திண்ணையில் படுத்துள்ள பிச்சைக்காரக் குடும்பத்திற்கும், உள்ளே படுத்துள்ள இந்த உழவுக் குடும்பத்திற்கும் என்ன வேற்றுமை! மானம் அழிந்து பிச்சை எடுத்து உண்டு, கவலையின்றி உறங்குகின்றான். திண்ணையிலிருப்பவன் மானத்திற்கு அஞ்சிப் பட்டினியுடன் தூங்குகிறான், உழவன். இது தானே இந்த உலகம் உழவனுக்குத் தரும் பரிசு! இந்த நிலையிலிருந்து உபதேசம் சொன்னால் ஒருவன் கூடக் கேட்க மாட்டான். இந்தத் துறையில் என்னால் உயரவும் முடியாது. வேறு துறையில் நுழைகிறேன்; உயர்கிறேன். உழவனுக்கு உதவி செய்து உயர்த்த வேண்டிய திட்டங்களை வகுக்கிறேன்' என்றெல்லாம் அவனுடைய சிந்தனைகள் பலவாறு சென்றன. அன்னையைச் சிறிது நேரம் உற்று உற்றுப் பார்த்தான். அவன் கண்ணீர்த் துளிகளால் அன்னையின் கால்களைக் கழுவிக் கையால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். அடுத்த சிறிது தூரத்தில் இரண்டு காதல் வாழ்வு வடிவங்கள் உறங்கிக் கொண்டிருந்தன. அவைகளையும் நெருங்கி, அன்னைக்குச் செய்த மரியாதை போலச் செய்தான். வீட்டுத் தாழ் திறந்து வெளியில் வந்தான். 'ஏன் இந்த இரவில் அன்னையிடமும் சொல்லாமல், அன்னை தந்தையரைப் போல் வளர்த்த அக் குடும்பத்தாரிடமும் சொல்லாமல் இந்த நள்ளிரவில் கள்ளனைப் போல் புறப்படுதல் வேண்டும்?' என்று எண்ணினான். மீண்டும், 'சிந்தனை மாறினால் இங்கிருந்து புறப்படுவதே முடியாது. இரவு 8 மணி முதல் செய்த சிந்தனைக்கும் உயிர் இல்லாமல் போகும்' என்று துணிவு கொண்டு அந்த வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நெடுந்தூரம் சென்றான். இருளில் அவன் உடலும் கரைந்து மறைந்தது; அவன் வளர்ந்த வீடும் அவன் பார்வையினின்றும் மறைந்தது. அந்த இரவு சில ஊர்களை எல்லாம் கடந்து விட்டான். வரம்புக் கோடில்லாமல் வட்டாட நினைப்பது போலச் செல்வம் கையில் இல்லாமல் சிறந்து வாழத் திட்டமிட்டுச் செல்லுகிறான் செல்வ நம்பி. அவன் செயலில் வெற்றியே அடைவானோ, தோல்வியே அடைவானோ?, அவன் எண்ணம் முன்னேற்றப் பாதையில் தான் செல்லுகிறது. செல்லட்டும் அவன்.

மணி; ஒன்று, இரண்டு, மூன்று என்று அடித்துக்கொண்டே வருகிறது. சூரியன் வருகையும் நெருங்குகிறது. கிழக்கே இருளைக் கிழித்து வான் நோக்கி வீசும் ஒளிச்சுடர் பாதை அகன்று கொண்டே வருகின்றது. சேவல்கள் எழுந்து பொழுது புலர்வதை மக்களுக்கு அறிவித்தன. வானத்து விண்மீன்களும் ஒவ்வொன்றாக மறைந்துகொண்டு வருகின்றன. மிக்க ஒளி வீசி உலகஉயிர்களை உவகையில் ஆழ்த்தும் செங்கதிரோன் வருகைக்கு முன் செறிவான இருளமைந்த குமரி இருளும் தங்கிக் கழிந்தது. கிழக்கு வெளுத்தது. உழவன் வீட்டில் செல்வநம்பியின் தாய் முகமும் வெளுத்தது. பூ இல்லாத மரத்தில் பொலிவு ஏது? மகன் காணாத தாய் முகத்தில் மகிழ்ச்சி ஏது? செல்வ நம்பி நாள்தோறும் அன்னை எழுந்துகொண்ட பிறகுதான் எழுந்திருப்பான். அம்மா தான் அவனைச் 'செல்வநம்பி!' என்று செல்வமாகஅழைத்து எழுப்புவது வழக்கம். முதுமையை விட இளமைக்குத் தூக்கம் அதிகமிருப்பது இயற்கை தானே! அம்மாவின் அன்பான முகத்தைப் பார்த்துக் கொண்டே மனத்தால் வணங்கி மகிழ்ச்சியுடன் எழுந்து செல்வான். இன்றும் வழக்கமாக எழுப்புதற்குத் தான் பொன்னியம்மாள் கட்டிலை நோக்கிச் சென்றாள். கட்டில் மட்டும் இருக்கிறது; கரத்தை நீட்டி யாரைத் தட்டி எழுப்புவது? கனத்தில் கைவைத்த வண்ணம் பொன்னியம்மாள் அசைவற்று நின்றாள். 'காணாமைக்குக் காரணம் என்ன?' என்று அவள் மனம் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தது. மீண்டும் 'ஒன்றுமிருக்காது வீணாக ஏன் மனத்தை மருட்டிக் கொள்ளுவது! காலைக்கடன் கழிக்கச் சென்றிருப்பான்' என்று ஒரு சிறு ஆறுதல் அமைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த தூணில் சாய்ந்து நின்றாள். அவனை மறந்து, தன் காரியங்களைக் கவனிக்கலாம் என்று நினைத்தர்ன். அவனை மறந்தாலல்லவோ காரியத்தின் மேல் கண் செல்லும். இரண்டு மூன்று நாட்களாக செல்வ நம்பியின் முகத்தில் பொலிவு குறைந்திருந்தது. கட்டழகுடைய காளை அவன். "காதல் வாழ்வில் கருத்தைச் செலுத்தியிருப்பானோ! கல்யாணம் செய்து வைப்பது பற்றி

அவன் என்னிடம் எப்படித் தாராளமாகப் பேசுவான்? குறிப்பறிந்து செய்ய வேண்டிய செயல் திருமணம். இதை வைத்துக் கொள்ளுவதென்றால் எவ்வளவு கஷ்டம். ஒன்றி வாழ்ந்தவள் நான் உறவு முறையை யாரிடத்தில் கொள்வது! இவ்வீடு என் தந்தை வீடு போலத்தான், ஆனாலும் தந்தை வீடாகுமோ! செல்வம் இருந்தால் இல்லாத உறவும் இருப்பதாக வந்து சேரும். செல்வம் இருந்தால் இந்த நிலை எனக்கு ஏன் வரும்! இந்த வீட்டார் கையில் செல்வம் இருந்தாலும் அது எனக்கும் சொந்தமான செல்வம் என்று கருதுவேன். அவர்களும் சொந்தமாகவே கருதுவார்கள். 'காசு இல்லாதவனைக் காலால் உதைத்துக் காசு உள்ளவனை அடியேன் தாசன் என்று கும்பிடும்,' காசுக் கடிமைப்பட்ட உலகத்தில் கல்யாணம் செய்து வைக்கக் காசுக்கு எங்கே செல்லுவேன். என செல்வக் கண்ணு இதை எண்ணித்தான் மூன்று நாள்வரை முகவாட்டத்துடன் இருந்தானே!" என்றெல்லாம் எண்ணினாள். தாங்க முடியாத மன வேதனை உள்ளத்திலே பொங்கி எழுகின்றது. 20 ஆண்டுகளுக்கு முன் தன் கணவனும் கூட நள்ளிரவில் சொல்லாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டார். அவர் உயிருடன் தான் இருக்கின்றாரா, இல்லையா என்பது கூடத் தெரியவில்லை. அக்கவலையை ஒருவாறு மறைக்கச் செய்தது உழவுத் தொழில் செய்து குழந்தையுடன் வாழ்ந்த வாழ்க்கை. கண்கள் இரண்டையும் காலச் சிந்தனைக்குள் கட்டுப்படுத்தி நோக்கினாள் பொன்னியம்மாள். காலை நேரம் நீண்டு செல்லுகிறது; அவள் உள்ளத்தில் கவலையும் வளர்ந்து செல்லுகிறது. கண்பார்வையை ஒருவாறு மாற்றிக் கொண்டு வீட்டின் நாற்புறத்திலும் திரும்பித் திரும்பிக் கண்களுக்கு எட்டிய தூரம் வரையில் பார்த்தாள். காணவில்லை.

அன்பெனும் கதவை அடைப்பதற்குத் தாழ்க்கோல் என்பது எங்கிருக்கிறது! அவன் வாழ்க்கை கவலைக்குள் மூழ்கியுள்ளது போலவே அவளுடைய கண்களும் கண்ணீரால் மூடப்பட்டன.

இந்த மனவேதனை எல்லாம் அந்த வீட்டாருக்கு இன்னும் எட்டவில்லை. அந்த வீட்டுச் செங்கழனி ரெட்டியார் பல்துலக்கிக் கொண்டே அப்பக்கம் சென்றபோது, பொன்னியின் முகத்தைப் பார்த்துவிட்டார். 'என்னம்மா செய்தி?' என்று கேட்டு விட்டால், பல் முத்துடன் கண்ணீர் முத்து கலந்து உறவாட வந்து விடும். பொன்னியை ஒன்றும் கேட்கவில்லை. நேராக வாசலுக்குச் சென்றார். மனைவியைப் பார்த்தார். 'கமலம்! பொன்னி கவலையோடு இருக்கக் காரணம் என்ன? நீ ஏதாவது வாய் தவ்றிப் பேசி விட்டாயா?' என்றார். இதைக் கேட்ட கமலம், 'ஒன்றும் இல்லையே. பொன்னி எங்கே இருக்கிறாள்?' என்று சொல்லிக்கொண்டே அப்பக்கம் திரும்பினாள். பொன்னியின் பின்புறம் தெரிந்தது.

'பொன்னியின் கவலைக்குக் காரணம் தெரியவில்லை. ஆனாலும் அவர்களால் ஆதரிக்கப்பட்டவள் தானே பொன்னி! அவ்விருவர் முகத்திலும் கவலை நோக்கு குடிகொண்டது. இருவரும் பொன்னியை நெருங்கினர். 'பொன்னி' என்றனர். பொன்னியும் மெல்லத் தலை நிமிர்ந்தான். அவளையும் அறியாமல் கண்ணீர் முத்துக்கள் கல கல வென்று உதிர்ந்தன. உழவர் கண்களிலும் காரணம் தெரியாமல் கண்ணீர் சொட்டின.

'பொன்னி! அழாதே, செய்தியைச் சொல்லு!' என்றார் செங்கழனி ரெட்டியார். சொல்ல வாயெடுத்தாள் பொன்னி. உதடு வெட வெட வென்று துடித்தது. சொல்லாமல் நிறுத்தி விட்டாள். மீண்டும் சமாளித்துக் கொண்டு 'சென்றுவிட்டான் போல் தெரிகிறது செல்வ நம்பி' என்றாள். 'என்ன பொன்னி! என்ன! உனக்கென்ன பைத்தியம்மா. காலமெ எழுந்து எங்காவது போயிருப்பான்! கஞ்சி குடிக்க வருவான்; இப்போ கொஞ்சம் கால தாமதமானால் கவலைப் படறதா? என்னமோ இண்ணு நினைச்சேன்' என்று சொன்னார்.

கால தாமதத்துடன் வந்தால் கவலைப் பட வேண்டியதில்லை தான். ஆனால், அவன் கவலை கொண்ட முகமே காட்டியது, அவன் வர்மாட்டான் என்பதை. ஒரு நாள் முன்பே தாய் அவனைக் கேட்டு இருக்கலாம். கேட்டால் மட்டும் உண்மையைச் சொல்லியிருப்பானோ? உண்மையைச் சொன்னால் பொருள் உதவி செய்து, 'போய் படித்துவிட்டு வாடா கண்ணு' என்று சொல்லி வழியனுப்புவார்களா? வாழ்க்கைச் சிந்தனை செல்வநம்பியைத் தூண்டி அழைத்துக் கொண்டு சென்றுவிட்டது. அன்பு இங்கே அடக்க முடியாமல் அலைந்து புலம்புகிறது. வறுமைக் கோலங்களின் திருவிளையாடல்களை என்னென்று விரித்துக் கூறுவது! தாயின் உள்ளத்தில் பாய்ந்த கவலை அவளைத் தரையில் தள்ளி எழவொட்டாமல் செய்தது!

(தொடரும்)

கருப்பும் சிகப்பும்!!

[அரசன்]

அம்மா! நீ சற்று தாமதித்து வந்திருந்தால் நான் இந்நேரம் எந்த குப்பைத் தொட்டியில் இருப்பேனே அறியேன்! அதுவும் சுக்கல் சுக்கலாக!! நான் அந்த முடிவை எதிர்பார்த்துத்தான் இருந்தேன்; ஆனால் கடவுள் மாதிரி வந்து நீர் எம்மைத் தடுத்தாட்கொண்டீர். இந்த வீட்டுச் செல்வச்சீமாட்டி ராஜம்மாள் அவ்வளவுக் கேவலமாக என்னை நடத்தினாள். மானத்தோடு வாழ விரும்புகிற எவரும் அதைச் சகித்துக் கொள்ள முடியாது. நீங்கள் அதைக் கண்ணால் கண்டிருந்தால், ஆம், மதிப்பிழந்து, மானத்தை விட்டு, சுயமரியாதையை விற்று வாழ்வதை விட சாவதே சாலச் சிறந்தது; என்று நீங்களே சொல்லி என்னை தடுத்தேந்தி இருக்க மாட்டீர்கள் இவ்வாறு, தன் கையிலிருந்து அந்த கரிச் சட்டி பேசியதைக் கேட்ட பொன்னி திடுக்கிட்டு என்னம்மா அது? உன் கதை? ஏதோ சொல் விவரமாகச் சொல்!! என்று கேட்க அந்த சட்டி சொல்லலுற்றது.

''நான் ஒரு ஏழை மண்பாண்டம் செய்யும் தொழிலாளியின் வீட்டில் பிறந்தேன். நான் மட்டுமல்ல என்னைப் போன்று நூற்றுக் கணக்கானவர்கள். அவன் பணத்தால் ஏழையே தவிர, மனத்தால் மிக்க பணக்காரன். யார் வந்து எதைக் கேட்டாலும் இல்லை என்னுது வழங்கும் வள்ளல் என்று, அவனைச் சொன்னால் மிகையாகாது.''

''வள்ளல் என்கிறாயே? ஒரு வேளை அவன் கொடுத்து கொடுத்து ஏழையாகி விட்டிருப்பான் போலும்''; என்றாள் பொன்னி.

''இல்லை அம்மா, இல்லை. அவனிடத்தில் கேட்பவர்களுக்குக் கொடுப்பதற்கு இல்லையே என்று பலமுறை வருந்தியதை நான் என் கண்ணால் கண்டிருக்கிறேன். எதுவும் தன்னிடத்து இல்லை என்றால் ஒரு சட்டியையாவது கேட்பவர்களுக்கு கொடுத்து திருப்தி அடைவான். அவ்வளவு நல்ல குணம் படைத்தவன் அவன். ஆனால், அவன் உழைக்கும் உழைப்போ; ஐயோ! அவன் படும்பாடோ; சொல்லுந்தரமன்று. தினசரி காலைசூரியன் தோன்று முன்புதான் துயிலெழுந்து மண்ணை உதைத்துப் பிசைந்திடும் போது வருகின்ற தன் வியர்வையை அந்த மண்கையோடு வழித்தெடுத்து மண்ணோடு மண்ணாக்கி சேர்த்திடும் தன்மையை நோக்கும்போது அக்காட்சி தன் உழைப்பு முழுதையும் அந்த மண்ணோடு சேர்த்துமட்கலங்கள் செய்யுமாப்போல் காணப்படும். ஆனால், அம்மண்ணைத் திருளில் (சக்கரத்தில்) இட்டு பல பல வடிவங்களைவடித்தெடுக்கும்அத் தொழிலாளியின் கைவண்ணக் காட்சி காணும் போது தான் என் மன வருத்தம் சற்று நீங்கி அகமகிழ்வதுண்டு. நான் மட்டும் என்ன இக்காட்சியை கண்டார் அனைவரும் வியக்கத்தான் செய்கிறார்கள். எத்தனையோ மேல் நாட்டு மக்கள் இதனை ஆவலாகவும், அதிசயத்தோடும் காண்பதை நான் நேரிற் கண்டிருக்கிறேன். இத்திறத்தினைப் போற்றுதார் எவருமில்லை. சக்கரத்திலே பானை சுற்றுகின்ற வேகத்தைப் பார்க்கும்போது உண்மையிலேயே உலகத்தைக் கடவுள் இப்படித்தான் சுற்றுகிறாரோ என்ற எண்ணமும் எனக்குத் தோன்றுவதுண்டு. இவன் தன் சக்கரத்தை நிறுத்தினால் உலகமே நின்றுவிடுமோ! இரவு பகல் அற்றுபோய்விடுமோ? என்றுகூட நான் சில வேலைகளில் எண்ணியதுண்டு. இத்தகைய கை வண்ண மிக்க தொழிலைப் படைத்திருக்கும் இவனைக் கடவுள் என் வறுமையில் உழலப் படைத்தான் என்பதைஎண்ணும் போதுதான் அக்கடவுள் ஏன் அழிந்தொழியக் கூடாது? என்று என்னை நானே கேட்டுக்கொள்வேன். பாவம்; கருத்தொரு மித்தக் காதலி பக்கம் வந்து நின்று, ''அத்தான்! பகல் சாப்பாட்டுக்கு பணம் ஏதாகிலும் இருந்தால் கொடுங்களேன்; பச்சிளங் குழந்தைகள் பட்டினியாக இருக்கின்றன,'' என்று பரிதாபக்குரல் எழுப்புவாள். இதைக்கண்டவுடன் என் மகிழ்ச்சி அனைத்தும் மறைந்து மனதில் இருள் சூழ்ந்து கொள்ளும்.

பணம் இருந்தால் தானே கொடுப்பதற்கு? சந்தைக்குச் சென்றால் தான் பணம். தற்போது பக்கத்து வீட்டு பச்சையிடம் ஏதாகிலும் கடனாக வாங்கிக்கொள்; என்று சொல்லிவிட்டு அவளுடைய முகத்தைக் கூடத் திரும்பிப் பாராமல் அவன் தன் தொழிலை யந்திரம் போல் செய்து கொண்டிருப்பான். ஆனால் பக்கத்து வீட்டு பச்சை பத்துக்காசுக்கு ஒரு குடுவையை விற்றால், பொன்னி போட்டி யிட்டு தன்வசமுள்ள அதே அளவுள்ள குடுவையை எட்டுக்காசுக்கு விற்பவள் ஆயிற்றே? இவள் எங்கிருந்து பச்சையைக் கடன் கேட்பாள்? எனவே, பச்சையைக் கேட்பதை விட பட்டினியால் வாடலாம் என்று முணு முணுத்துக் கொண்டே அன்று முழுதும் பட்டினிப்போட்டு விடுவாள். அடடா என்ன வறுமை!

உள்ளத்திலே வற்றாத ஊற்று; வாழ்க்கையிலே தளராத வறுமை. அன்று நாள் பூராவும் பட்டினி. இந்த நிலையில் எதிர்பாராத விதமாக ஒருநாள் ஒரு விருந்தினன் வந்துவிட்டான். என் செய்வர்! ஏழை மக்கள் வறுமையால் வாடிக்கிடந்திடினும் கடன் பட்டேனும் வந்த விருந்தினரை உபசரித்தல் அல்லவா நம்நாட்டு பண்பு. வந்தவரை உபசரித்து அன்னாருக்கு வேண்டிய சில மட்கலங்களையும் இனாமாகக் கொடுத்து விருந்தினரை அனுப்பினர் அந்த மண்பாண்டத்தொழிலாளி. அவற்றுள் நான் ஒன்று என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நான் ஏழை வீட்டில் பிறந்திடினும் புகுந்த இடம் சீரும் சிறப்பு மிக்க இடமாக இருக்கும் என்று இரும்பூதெய்தினேன். இனி வறுமைக் காட்சிகளைக் காணும் வாய்ப்பு நீங்கவில்லை; என்று இறுமாந்திருந்தேன். வறுமையிலே உழன்ற எனக்கு, செல்வநிலை கண்டதும் செருக்கு சற்று ஏற்பட்டது. ஆனால், அவைகள் நெடு நாட்கள் நீடிக்கவில்லை: சின்னாட்களில் செருக்கழிந்து சீரழிந்தேன். எனக்கு முன்னாலேயே என்னைக் காட்டிலும் பளபளப்பும், தகதகப்பும் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் நான் புகுந்த வீட்டில் இருக்கக்கண்டேன். அவைகள் என்னைப் பார்த்து கேலி செய்வது போன்று இருந்தது என் கண்களுக்கு. ''இதோ பார்! பட்டிக் காட்டு பெண்'' என்று பரிகசிப்பது போல் இருந்தது. அதற்கு ஏற்றாற்போல், அந்தவீட்டுச் சீமாட்டி ஒரு நாள் கூட என்னை அவர்கள் பக்கத்தில் வைப்பது கிடையாது. ஆக்குவதும், அடுப்பில் ஏற்றுவதும் என்னை; ஆனால் ஆக்கிய பதார்த்தங்களை அழகுற வைப்பது அந்தப் பாத்திரங்களில். எனக்கோ வீட்டின் புறத்திலே இருக்கை. ஆனால் அப்பாத்திரங்களுக்கோ இருக்கை நடு வீட்டில்: நாலுபேர் முன்னிலையில். நானோ வெளியில்; அவைகளோ பீரோவில். எனினும் அவற்றிற்குள்ள அருகதை எனக்கு இல்லை. நான் கருப்பாய் இருப்பதால் எனக்கு இந்த நிலையா? நான் கருப்பாய் இருப்பது யார் குற்றம்? என் குற்றமல்லவே! நான் பிறக்கும்பொழுதே கருப்பாகப் பிறந்திருந்தால் அஃது படைத்தவன் குற்றம் எனலாம். அதுவும் இல்லை. என்னைக் கருப்பாக்கியது இந்தப பாவி செல்வச்சீமாட்டி ராஜம் தானே. உலகத்தில் எவ்வளவோ பேர் கருப்பாக இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் இவ்வுலகத்தில் வாழத் தகுதி யற்றவர்களா? நற்குணமும் நற்செய்கைகளும் தானே ஒருவருக்கு அணிகலன். கருப்பு, சிவப்பு வெண்மை இவற்றால் என்ன பயன்? சிவப்பாக இருக்கின்ற எத்தனைபேர் பாபக்கறை படிந்தவர்களாக. பொய் - களவு சூது-சினம் நிறைந்தவர்களாக விளங்குகிறார்கள். வெளுப்புக்கு ஏற்றம், கருப்புக்கு இழிவா? இந்த இழிநிலையை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. இந்நிலை மாறுவதெப்பொழுது? உழைப்பவன் நான். உழைப்பின் பயனும் படாடோபமும் அவற்றிற்கு. என்ன உலகம் இது? உழைக்கின்றவனுக்கு மதிப்பில்லை. வீணில் உண்டு காலங்கழிக்கின்றவர்களுக்கு, உழைப்பின் பயனை உண்டு களித்து உல்லாச வாழ்க்கை வாழுகின்றவர்களுக்கு மதிப்பு. இந்த இழிநிலை என்றுமாறப் போகிறதோ, என்றைக்கு உழைப்பவனுக்குஏற்ற ஊதியமும் உயர்வும் கிடைக்கப் போகிறதோ, உண்மைத் தொழிலுலகம் என்றுதான மலரப்போகிறதோ? அறியேன். நான் எதையோச் சொல்ல ஆரம்பித்து ஏதேதோ சொல்லி விட்டேன்; மன்னிக்க வேண்டும் அம்மா. அந்தச்செல்வச் செருக்கர்கள் வீட்டிற்கும், அந்த மண் குடிசையில் பகல் பட்டினியால் வாடும் பாமர மண்பாண்டத் தொழிலாளிக்கும் எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா? அவன் வறுமையால் வாடுகிறான்; இவன் செல்வத்தால் செய்வதறியாது மனம்போனவாறு தீய வழிகளிலே தன் பணத்தை செலவழிக்கிறான். அவன் வீட்டுக்குழந்தைகள் படிப்பதற்கும் வகையின்றி திரிகிறார்கள். இவன் வீட்டுக்குழந்தைகள் பட்டம் பெற்றும் பண்பை விற்றுத் திரி

ருர்கள். அவன் நாய் போல அலைகிருன் இவனோ யானை போல அசையாது உண்கிருன். அவனோ வற்றுத குணக்குன்று: இவனோ பேயென எரிந்துவிழுகிருன். அவனோ எவர் மாட்டும் இரக்கங்காட்டுகிருன். இவனோ ஆணவத்தால் அனைவரையும் அலட்சியப் பார்வையுடன் பார்க்கிருன். அம்மம்மா! எவ்வளவு வேற்றுமை? அவனிடத்தில் உள்ள வறுமை ஒழிந்து, இல்லாமை ஒழிந்து, பட்டினி ஒழிந்து, கல்லாமை ஒழிந்து இவனிடம் இருக்கிற ஆணவம் ஒழிந்து, அலட்சியம் ஒழிந்து, தீக்குணம் ஒழிந்து இருவரும் ஒருவராகக் காணில் எவ்வளவு நன்ருக இருக்கும். இந்த உலகத்தில் அவ்வாறு காண்டல்அரிதாக இருக்கிறதே? ஏன்? ஏன் இந்த இழிநிலை? என்னை இவ்வாறு ஒதுக்கிவைக்க வேண்டும்? நான் அனைவருக்கும் சுகத்தைஅளிக்கிறேன். அதையும் மறந்து என்னை இழிவு படுத்துகிருர்களே இந்த மனிதக் கூட்டம். நன்றி கெட்ட மக்கள். நல்லதறியாத மக்கள். இதை எல்லாம் நான் கேட்கிறேன் என்பதற்காக அந்த சீமாட்டி தன் மகன் சுப்புவைக் கூப்பிட்டு என்னைக் கொண்டு போய் நடுத்தெருவில் போட்டு உடைக்கச் சொல்லிவிட்டாள். நான் திடுக்கிட்டுப் போனேன். நல்ல வேளையாக நீங்கள் வந்து என்னை ஏந்திக் கொண்டீர்கள். உண்மை உழைப்புக்கும் அந்த உழைப்பை அணிகலனாகக் கொண்ட தொழிலாளிக்கும் உரிய அந்தஸ்தையும் ஊதியத்தையும் அளிக்காத வரையில் இந்நாடு உருப்படுமா? அதுவரையில் இந்நாட்டில் வாழ்ந்தும் என்னபயன்? சாவதேமேல் என்று எண்ணிக் கிடந்த என்னை நீங்கள் ஏன் சாவினின்று மீட்டீர்கள் என்று சொல்லித் தன் கதையை அந்தக் கரிச்சட்டி முடித்தது.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த பொன்னி இந்தக் கரிச்சட்டியின் வரலாறு தன் வரலாற்றைப் போல் இருக்கிறதே என்று எண்ணிக்கொண்டே தன் கண்களிலிருந்த நீர்த் திவலைகளைப் பெருக்கிக்கொண்டே பக்கத்து வீட்டிற்குப் பிச்சை எடுக்கச் சென்று விட்டாள்.

MURUGAN STORES

Gangaram Buildings, Ajmal Khan Road, Karol Bagh,

NEW DELHI.

★

Dealing with All South Indian Goods such as Coffee, Raw-Roast & Powder, Rice, Provisions,

HOME DELIVERY UNDERTAKEN.

Our aim is to Satisfy All.

இலக்கியம் :

★ கண் புதைத்த காட்சி? ★

[பி. வி. கிரி]

பாண்டியனின் படை வீரர்கள் புலியெனப் பாய்ந்து சீறினர். எதிரிகளின் எக்காளத்தை அடக்க சிங்கத் தமிழ் வீரர்கள் செய்யும் போர், வீரவுணர்ச்சியூட்டும் காட்சி! எப்பக்கம் திரும்பினாலும் ரத்த வெள்ளம். உறுப்பிழந்தோர். உருக்குலைந்தோர் நிலை, நம் மனதை உருக்கும். களிறுகளின் பேராற்றலால் பெருந்துன்பப்பட்ட எதிரிகள் ஏராளம்!

புழுதியை வாரி யிறைத்தோடும் பரிகள் பல. ரதங்கள் பல. தூள்! தூள்!

வெற்றி! வெற்றி! ஆம் வெற்றிச் சங்கு ஊதிக்கொண்டு பாண்டியனின் படைவீரர்கள் வலம் வருகின்றனர். "பாண்டியன் வாழ்க"—வானை முட்டும் அளவுக்கு களிப்புடன் செல்கிறது படை வரிசை!

இன்பத்திற்குப் பின் துன்பமும் வருமன்றோ? தூரத்திலே கண்ட ஒரு காட்சி பாண்டியனது மனதைப் புண்படுத்திவிட்டது.

பெண்கள் பலர் தீ மூட்டி அதில் குளிக்கும் காட்சி பாண்டியனது மனதை உருக்கியது. தன் மேலங்கியின் முந்தானியால் கண்களைப் பொத்திக்கொண்டான், அக்கண்ணறுவிக் காட்சிதன் கண்ணில் படாமல் இருப்பதன்பொருட்டு! ஆம்! எதிரிகளின் மனைவியர் பலர் தம் கணவன்மார்களை இழந்ததால் தீக்குளித்தனர்.

பாண்டியன் மேலே சென்றான்.

எதிரிகளுக்குச் சொந்தமான ஆண் யானைகள் பல போரிலே இறந்துபட்டன. அதுகண்டு பொறாத பெண் யானைகள் வருந்தும் காட்சியும், அக் காட்சியினை கண்ட பாண்டியனது யானைகள் தம் கண்களைப் புதைத்த காட்சியும் பாண்டியனின் கண்களில் பட்டன.

பாண்டியனது மனதிலே மகிழ்ச்சி முகிழ்த்தது. தன்னைப் போலத் தன் யானைகளும் கண் புதைத்த செயலினை எண்ணி இன்பங் கொண்டான். இவ்வழகான காட்சியைக் கூறும் முத்தொள்ளாயிரச் செய்யுள் பின் வருமாறு:

ஏனைய பெண்டிர் எரி மூழ்
கக்கண்டு, தன்
தானையால் கண்புதைத்
தான் தார் வழுதி—[யானை
யெலாம்
புல்லார் பிடி புலம்பத் தாம்
கண்புதைத்தவே]

பல்வாயால் பட்டகளத்து. போர்க்களத்திலே மன்னன் கண்புதைத்த காட்சியையும், கரிகள் கண் புதைத்த காட்சியையும் அழகாகப் புலவர் சித்தரித்திருப்பது அனைவரையும் மகிழ்விப்பதாகும். பாடலை மீண்டும் மீண்டும் படித்து இன்புறுவோமாக!

இந்தியாவுக்கு யு. எஸ். மேலும் நிதி உதவி

இந்திய சர்க்காருக்கும் அமெரிக்க சர்க்காருக்கும் இடையே மே இறுதியில் எட்டு இந்தோ-அமெரிக்க வேலைத் திட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின அவற்றின்படி நீரூற்றுக்கள் இருக்குமிடங்களைக் கண்டுபிடிப்பது, கால்நடை அபிவிருத்தி, தொழிலியல் ஆராய்ச்சி, சுகாதாரம். கூட்டுறவு இயக்கம், கல்வி, விவசாயம் ஆகிய துறைகளில் தொழில் நுட்ப உதவிக்காக இந்தியாவுக்கு 2,85,555-டாலர் (சுமார் ரூ. 14 லட்சம்) உதவி கிடைக்கும்.

1958-ம் ஆண்டு யு. எஸ். நிதி வருஷத்திய பட்ஜெட்டில் இந்தியாவுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 63 லட்சம் டாலரில் ஒரு பகுதியாகும்.

சந்திர மண்டல ஆராய்ச்சிகள்

அமெரிக்கா இவ்வாண்டு இறுதியில் மேற்கொள்ளும்

இவ்வாண்டு இறுதியில் சந்திரனைப் பற்றிய முதலாவது ஆராய்ச்சியில் இறங்குவதற்கு அமெரிக்க வான வெளி விஞ்ஞானிகள் ஆயுத்தம் செய்து வருகின்றனர். எதிர் கால விஞ்ஞானப் பரிசீலனைகள் பாதிக்கப்படாமல் இருக்கும்முறையில் சந்திரனைக் களங்கப்படுத்தாமல் இருக்க, இப்பொழுது ஆராய்ச்சியில் ஈடுபடப் போகும் விஞ்ஞானிகள், எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வர்.

சந்திரனில் இருக்கலாம் என்று கருதப்படும் ஜீவராசிகளைப் பாதிக்க்க்கூடிய எந்த வஸ்துவும் சந்திரனில் போய்ச் சேராமல் இருப்பதற்கு எடுத்துக் சொள்ளப்படும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை எல்லாம் ஏ. எப். டொனேவான் விளக்கினார். இவர் லாஸ் ஏன்ஜெல்ஸ் நகரில் இருக்கும் வான வெளி தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கூடத்தைச் சேர்ந்தவராவார்.

உயிர் இன விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு செயற்கைச் சந்திரன்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதுபற்றி நான்கு நாள் விவாத அரங்கு ஒன்று நடைபெற்றது.

தேசிய விஞ்ஞான ஸ்தாபனம், தேசிய விஞ்ஞானக் கழகம், உயிர் இன விஞ்ஞானங்கள் பற்றிய அமெரிக்கக் கழகம், ஆகியவை இந்த அரங்குக்கு ஏற்பாடு செய்தன. வானவெளியில் மனிதன் பிரவேசிப்பதற்கு முன், வான வெளியில் உயிர் இன சம்பந்தமான ஆராய்ச்சிக்குத் தயார் செய்வதே இந்த அரங்கின் நோக்கம்.

அபாயம் என்னவென்றால், பூமியிலிருந்து சந்திரனுக்குள் புகக் கடியது எதுவும் அதைக்களங்கப்படுத்தலாம் என்றார் டொனேவான்.

சந்திரனைத் தாக்குவதற்கு அனுப்பப்படும் கருவி ஒன்றின் மேல்புறம் வாயுமண்டலஉஷ்ணத்தின் மூலம் சுத்தம் செய்யப்படும். உள்புறம் விசேஷ முறைகளால் சுத்தம் செய்யப்படும் என்றார்.

ஆரம்ப சந்திர ஆராய்ச்சிகளில், சந்திரன் களங்கப்படுத்தப்படும் அபாயம் அதிகம் இல்லை. இந்த ஆராய்ச்சிகளில் ஐந்துக்கு பாதுகாப்பு இலாகாவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இரண்டு ராணுவ ஆராய்ச்சித் திட்டங்களுக்கும் இந்த ஸ்தாபனம் அங்கீகாரமளித்துள்ளது.

மூன்று சாத்தியங்கள்

மூன்று சாத்தியக் கறுகள் உள்ளன: சந்திரனைக் கடந்து செல்லலாம், சந்திரன் மீது மோதலாம், அல்லது சந்திரனைச் சுற்றி வரலாம். இவற்றில், சந்திர ஆராய்ச்சிகளின் போது, சந்திரனை மோதுவதையோ அல்லது சுற்றுவதையோ விட தாண்டிச்செல்வதுதான் முதலில் சாத்தியமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்பொழுது இக்கலை இருக்கும் நிலையில், சந்திரனை நேராகச் சென்று மோதுவதால், ராக்கெட்டிலுள்ள கருவிகள் சேதமடைந்துவிடக்கூடும் என்பது ஒரு காரணமாகலாம்.

ரகசியமாக இருக்கும் கதிரியக்க மண்டலத்தின் வெளி எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு சந்திரனை நேராக மோதும்படி ஒரு ராக்கெட்டை ஏவுவது இப்பொழுது ரொம்பவும் உபயோகமாக இருக்குமென்று ஜார்ஜ் லட்விக் கூறினார். இவர் டாக்டர் ஜேம்ஸ் வான் ஆலனுக்கு ஆராய்ச்சி உதவியாளராக இருக்கிறார். டாக்டர் ஆலன் ஒரு

அமெரிக்க கமிட்டியின்கீழ் செயற்கை கிரகங்களுக்கு கருவிகள் அமைக்கும் பிரிவுக்குத் தலைவராக இருக்கிறார்.

பிரஸ்தாப ரகசியக் கதிரியக்க மண்டலமானது செயற்கைச் சந்திர விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டது ஜனவரி 31-ம் தேதி ராணுவம் அனுப்பிய முதலாவது அமெரிக்க செயற்கைச் சந்திரனிலிருந்து கிடைத்த தகவல்களை ஆராய்கையில் இதுகண்டு பிடிக்கப்பட்டது.

வான வெளியில் உயிரின ஆராய்ச்சிகளுக்கு முயற்சிப்பதற்கு முன் வான வெளிச் சூழ்நிலை [illegible] இயல்பை அறிந்து கொள்வதன் முக்கியதத்துவத்தை டாக்டர் ரிச்சர்ட் டபிள்யூ போர்ட்டர் வலியுறுத்தினார். இவர் செயற்கைச்சந்திரன் தொழில் நுட்பககுழுவின் தலைவராவார்.

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எக்ஸ்-கதிரியக்கத்தை நன்ருகத் தெரிந்து கொள்வது அவசியமாகும் என்று அவர் வலியுறுத்துகிருர்.

விமானப் படையின் கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் கணைகளான அட்லாஸ், டிடான், நடுத்தர ஏவுகணையான தார் ஆகியவற்றில்தகுதியான அதிகப்படி கட்டங்களைச் சேர்ப்பதன் மூலம், மனிதன் சந்திரனைச் சுற்றிவிட்டு பூமிக்குதிரும்பி வரவும், மனிதன் பூமியைச் சுற்றிவரவும், சாத்தியமாகலாம் என்றும், பத்திரமாகத் திரும்பி வருவதற்கு எல்லா ஏற்பாடுகளும்இருக்கும் என்றுடொனேவான் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார்.

ஏற்கெனவே 5000-க்கு அதிகமான கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; அவைகளின் ஆதரவில் 10 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trinchengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்பு பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

ஐந்தாண்டுத் திட்டங்கள்

[ராதா]

"சுதந்திரம் பெற்றோம்; சுகவாழ்வு பெறுவோம்" என்பதே நம் காங்கிரஸ் சர்க்காரின் குறிக்கோள். இவ்வித சுகவாழ்வடைவதற்கே இந்திய அரசாங்க திட்டக் கமிஷன் இரண்டு ஐந்து வருஷத் திட்டங்களை வகுத்தது.

இரண்டு முக்கிய நோக்கங்களுடன் முதல் ஐந்து வருஷத்திட்டமவகுக்கப்பட்டது. இரண்டாவது உலகயுத்தம், தேசப் பிரிவினை ஆகியவைகாரணமாக எழுந்த சில் அவசரப் பிரச்னைகளை சமாளிப்பது முதல் நோக்கம். வருங்காலத்தில் அதிதுரித முன்னேற்றத்துக்கு வசதி அளிக்கவேண்டி பொருளாதார அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதும் சமூக அமைப்பில் மாறுதல்களை தொடங்குவதும் இரண்டாவது குறிக்கோள்.

முதல் திட்டத்தின்படி ரூ. 2,000 கோடி செலவில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி, பொருளாதாரத்தை சமநிலைப்படுத்தி, பின் அபிவிருத்தி வேலைகளை அதிகப்படுத்தியிருக்கிறது நம் சர்க்கார்.

இப்பொழுது தொடர்ந்து இரண்டாவது ஐந்துவருஷ திட்டத்தை தீட்டியிருக்கிறது. இதில் தொழில்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மனிதனுக்கு தேவையானது முதலில் உண்ண உணவு. இரண்டாவதாக உடுக்க உடை. பின் இருக்க இடம், பொருள்வசதி, தொழில், வியாபாரம் முதலியன.

முதல் திட்டத்தில் விவசாயத்திற்கும், அதற்கு தேவையான நீர்ப்பாசன வசதிக்கும் ஏற்பாடு செய்தாகி விட்டது.

ஆகவே, இரண்டாவது திட்டத்தில் வாழக்கைத் தரங்களை உயர்த்துவதோடு நில்லாது, பொருளாதாரத்துக்கு தெம்பு ஊட்டி, அதன் மூலம் நல்வாழ்வு, அறிவுச் சாதனைகள், கலாசாரச் சாதனைகளையும் உயர்த்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் ஓர்நல்ல சமுதாயம் உருவாகலாம். அதாவது 'சோஷலிஸபாணி சமூகம்' ஏற்படும் என்று இரத்தின சுருக்கமாகச் சொல்லாம். வாழ்க்கையில் பாமர மனிதன் உயர்வதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய சூழ்நிலையை இது தோற்றுவிக்கும்.

2-வது திட்ட நோக்கங்கள்

இரண்டாவது திட்டத்தின் குறிக்கோள்களாவன:

1. நாட்டில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் விதத்தில் தேசிய வருமானத்தை அதிகரித்தல்;

2. துரிதமாகத் தொழில் மயமாக்குதல், இதில் ஆதார, கனரகத் தொழில்களின் அபிவிருத்திக்கு விசேஷ முக்கியத்துவம் அளித்தல்;

3. வேலை வாய்ப்புக்களை விஸ்தரித்தல்;

4. வருவாய்களிலும், செல்வத்திலும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்; பொருளாதார வளங்களை இப்போதை விடச் சமமாக வினியோகித்தல்.

திட்டத்தின் தொழில் கொள்கைக்கு, 1948ம் வருஷத் தொழில் கொள்கை தீர்மானமே ஆதாரமாகும். அதை அனுசரித்தே தேச சுதந்திரத்துக்குப்பின் இந்திய அரசாங்கத் **தொழில் கொள்கை** உருவாகியது. இதில் அரசாங்கத்தின் பங்கும், பொறுப்பும் முக்கியமானவை.

தொழில் வகைகள் பலவற்றின் வருங்கால அபிவிருத்திக்கு அரசாங்கம் நேரடியாகப் பொறுப்பு ஏற்க முற்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கம் தொழில்களை இருஜாபிதாக்களாக பிரித்திருக்கிறது. முதல் ஜாபிதாவில் இரும்பு, எஃகு, அணுசக்தி, ஆயுதங்கள், நிலக்கரி, எண்ணைகள் போன்ற 18 தொழில்கள் உள்ளன. இரண்டாவது ஜாபிதாவில் அலுமினியம், இயந்திரக்கருவிகள், கலப்பு உலோகங்கள் போன்ற 12 தொழில்கள் உள்ளன.

புதிய தொழில்களை அரசாங்கமே பொதுவாக நிறுவும். ஆயினும், அரசாங்க முயற்சிக்கு அனுசரணையாக தனியார் முயற்சியும் நடக்க வகை உண்டு. அவசியப்படும்போது எந்தத் தொழில் துறையிலும் அரசாங்கம் பிரவேசிக்கும்.

திட்டக்காலத்தில் அபிவிருத்திக்காக சர்க்கார் ரூ. 4,800 கோடி செலவு செய்யும்.

போன் நெ. 85206. தந்தி : "AKILAM"



ஸ்ரீ ஜெயபாரதம் பிரம்பு நாற்காலிகள் பல் வருடங்களாக நாணயமாகவும், நய்மாகவும், அழகாகவும், முதல் தரமான பிரம்பினாலும், ஊக்கமான உழைப்பினாலும், பொருத்தமான அளவினாலும், கண்ணைக் கவரும் பல ரக எனமல் வர்ணங்களுடன் தங்கள் அழகான பங்களா, கார்டன், கிளப், ஆபீஸ், சினிமா, ஸ்டுடியோ முதலிய இடங்களுக்கு தங்கள் மனத்திருப்திக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொடுத்துவருகிறோம்.

★

காட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனி

(ரிஜிஸ்டர்ட் நெ. 174558)

182, ராயப்பேட்டை ஹைரோட்,

சென்னை-14.

தென்னாட்டின் நிலக்கரி நகர்

[வர்க்கி செரியன்]

சென்னை நிதி மந்திரி ஸ்ரீ. ஸி. சுப்ரமணியம் சமீபத்தில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை செங்கல் ரூபத்தில் கெட்டியாக்கும் பரீட்சார்த்த யந்திரத்தை முடுக்கிய போது, உற்பத்திப் பிரிவிலிருந்து பழுப்புக்கரி பாளங்கள் வந்து குவிய ஆரம்பித்தன. இந்தப்பாளங்கள் சாண நிறத்தில் இருக்கின்றன.

இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் நெய்வேலியில் கரிக்கட்டிகள், அடுப்புக்கரியாக சாண வரட்டிகளுக்குப் பதில் உபயோகிக்கப்படும். இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் அநேக வீடுகளில் சாண வரட்டிகள் எரி பொருளாக உபயோகிக்கப்படுகின்றன. இனி வீட்டுப் பெண்களுக்கு சாண வரட்டி தட்டும் வேலை இருக்காது. சிறந்த உரமான சாணத்தை வயல்களுக்கு உபயோகிக்க இனி முடியும்.

மேலும் இந்தக் கரியை உபயோகிப்பதால், நாடுகளில் உள்ள மரங்களும் அனியாயமாக விறகுக்காக அழிக்கப்பட மாட்டா. மீண்டும் வனங்கள் செழிப்பாக வளர்ந்து, அதனால் நில அரிப்புத் தடைப்பட்டு மழையும் நன்ருகப் பொழியும்.

பழுப்பு நிலக்கரியை "கரும்பொன்" என்று சொல்லலாம். தென் ஆற்காடு ஜில்லாவில் பூமிக்கடியிலிருந்து எடுக்கப்படும் இந்தக் கரும்பொன் விளைவிக்க இருக்கும் பெரும் வாய்ப்புக்களைக் கருதும் போது, இது ஒரு பெரிய புரட்சி எனலாம்.

அடுப்புக் கரியாக பயன்படுவதுடன் மட்டும் இது நின்றுவிடப் போவதில்லை. சென்னை ராஜ்யத்திற்கு மிகவும் தேவையாக இருக்கும் மின்சார உற்பத்திக்கும் இது பயன்படுத்தப்படும். இதை சென்னை ராஜ்யத்தின் ஒரு வரப் பிரசாதம் என்று கூடச் சொல்லலாம்.

சென்னையின் வரப்பிரசாதம்

சென்னை ராஜ்யத்தில் மின்சாரத் தட்டுப்பாடு நிரந்தரமாகவே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் சில மாதங்கள் மின்சார சப்ளைக் குறைவினுல் கைத்தொழில்களும் விவசாயமும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. நீர் மின்சார நிலையங்கள், பருவ மழைகளின் தயவை பெரிதும் நாடி இருக்க வேண்டியிருக்கிறது. நிலக்கரிக்குத் தட்டுப்பாடு இருக்கையில், எரி விசை மின்சார நிலையங்கள் கட்டுவது கட்டுபடியாகும் காரியமல்ல.

நெய்வேலியில் பழுப்புக்கரி இருப்பது இதற்கு முன்பே தெரிந்து இருந்த போதிலும் 10 ஆண்டுகளுக்கு முன்னுல் தான் எவ்வளவு இருக்கிறது என்பது கண்டு கொள்ளப்பட்டது. 100 சதுர மைல் பரப்பில், 200 கோடி டன் பழுப்புக்கரி இருக்குமென்று மதிப்பிடப்பட்டது.

சுலபமாக எடுக்கக்கூடிய பழுப்புக்கரி 5 சதுர மைல் பிரதேசத்தில் 20 கோடி டன் இருக்கிறது. இங்கு தான் அளவிலும் இது அதிகமாக காணப்படுகிறது. சென்ற மே மாதம் பிரதம மந்திரி நேரு, இந்த பிரதேசத்தில் கரி தோண்டி எடுக்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார்.

நெய்வேலி பழுப்புக்கரி, ஜெர்மன் பழுப்புக்கரியை விடச் சிறந்த ரகம் என்று கூறப்பட்ட போதிலும், சுரங்க வேலை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு தொழில் நுட்பத் தடங்கலைத் தீர்க்க வேண்டியிருந்தது. மிக வேகமாக மேலே பாயும் தண்ணீர் ஊற்றுகள் சுரங்க வேலையை அசாத்தியமாக்கின. இதனுல் திறந்த சுரங்க வெட்டு முறை கையாளப்பட்டது. அத்துடன் தண்ணீர் இறைக்க பிரமாண்டமான பம்புகளும் உபயோகிக்கப்பட்டன.

சுலபமாக கிடைக்கக்கூடிய பழுப்புக்கரியை 60 ஆண்டு காலத்தில் தோண்டி எடுக்க 75 கோடி ரூபாய் பிடிக்கும் 5 ஆண்டு திட்டம் ஒன்றை நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறைவேற்றி வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்புக்கரி தோண்டி எடுக்கப்படும்.

பரீட்சார்த்தத்திட்டங்களுக்காக, கச்சா பழுப்புக்கரி, திறந்த சுரங்கங்களிலிருந்து வெட்டிஎடுக்கப்பட்டுள்ளது. பிரம்மாண்டமான புல்டோ

ஸர்கள், மண் அகற்றும் யந்திரங்கள் முதலியன பக்கத்திலுள்ள இடத்தில் நாள் ஒன்றுக்கு 16 மணி நேரம் வேலை செய்கின்றன. பெரும்பாலான மண் அகற்றும் யந்திரங்கள் எல்லாம் அமெரிக்காவிலிருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் தருவிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள சுரங்க இயந்திரங்கள் இயங்க ஆரம்பிக்கும்.

ஒரு காலத்தில் தரிசாகக் கிடந்த நெய்வேலியில் இந்த சுரங்க வேலை உற்சாகத்தை ஊட்டியுள்ளது. 10,000 வீடுகள், அநேக காரியாலயங்கள் மார்க்கெட்டுகள், ஆஸ்பத்திரி ஆகியவை கொண்ட ஒரு குட்டி நகரம் அங்கு தோன்றியுள்ளது.

தென் நாட்டின் ஜாம்ஷெட்பூர்

நெய்வேலி தென்னாட்டின் ஜம்ஷெட்பூர் ஆகப் போகிறது என்று லிக்னைட் கார்ப்பொரேஷன் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆண்டுதோறும் தோண்டி எடுக்கப்படும் 35 லட்சம் டன் பழுப்புக்கரியில், சுமார் 15 லட்சம் டன் வரை எரிவிசை மின்சார உற்பத்திக்கு உபயோகிக்கப்படும். இந்த மின்சரா உற்பத்தி நிலையமும் பக்கத்தில் தான் கட்டப்படும். இது 2,50,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும். நெய்வேலியில் அமைக்கப்டெலிருக்கும் உர உற்பத்தி தொழிற்சாலை 5 லட்சம் டன் கரி உபயோகிக்கும்.

எஞ்சியுள்ள 10 அல்லது 15 லட்சம் டன் பழுப்புக்கரி,

வள்ளுவர் ஈந்த பொருள்

(வரகூர், சங்கீதபூஷணம், க. முத்துக்குமாரசாமி)

இராகம் : மணிரங்கு தாளம் : ஆதி

பல்லவி

வள்ளுவர் ஈந்தபொருள் திருக்குறளே-நம்
வாழ்வினைத் திருத்தி மாண்பினைப் பெருக்க(வள்ளுவர்)

அனுபல்லவி

எள்ளளவும் உலகம் என்றும் குறைசொல்லாமல்
எந்தமொழியும் போற்ற இன்பத் தமிழ்மொழியில்(வள்)

சரணம்

மாய மொழியைக் கொண்டு மயங்கா வழி காட்டவே
தீயகத்தை நீக்கித் தெள்ளறிவு கூட்டவே
நேயகத் தோராக்கி நிலத்தில் நலம் நாட்டவே
தூய வித்தை ஊட்டித் துன்பமதை ஓட்டவே (வள்ளு)

வீடுகளுக்கும், இதரகாரியங்களுக்கும் வேண்டிய கரிக்கட்டிகளாகத் தயாரிக்கப்படும்.

மூன்று லட்சம் டாலர் விலையுள்ளதும், ஐந்து யூனிட்டுகள் கொண்டதுமான கரிப்பாளங்கள்யந்திரம் அமெரிக்கா, வழங்கிய நன்கொடையாகும். ஆறே வாரங்களில், இதற்குமுன் கண்டிராதமுறையில், இந்த யந்திரம்அமைக்கப்பட்டது.

மிகத் திறமையாக வேலை செய்யக்கூடிய யந்திரங்களின் அமைப்பை ஸ்தல சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிர்ணயம் செய்வதற்கு சோதனைகளை நடத்துவதுதான் இந்த பரீட்சார்த்த யந்திரத்தின் நோக்கம். இறுதியில், நிர்ணயம் செய்யப்பட்டபடி யந்திரம் அமைக்கப்படும்.

பரீட்சார்த்த யந்திரத்தை நன்கொடையாக அளித்ததற்கு மிகுந்தபாராட்டுதலைத் தெரிவித்த நிதி மந்திரி ஸ்ரீ சுப்ரமணியம், இறுதியில் அமைக்க வேண்டிய யந்திரத்தையும் சப்ளை செய்யும்படி அமெரிக்காவை வற்புறுத்தினார். இந்த சந்தர்ப்பத்தில், இந்தியாவில் அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்புச் குழுவின் டைரக்டராக இருக்கும் மிஸ்டர் ஹாவர்ட் ஈ உஹஸ்டன் பேசுகையில், நெய்வேலி, நவ இந்தியாவின் மனதைக் கவரும் கோயில்களான பக்ரா நங்கல், தாமோதர் பள்ளத் தாக்குத்திட்டம், போன்றவற்றின் ஜாபிதாவில் சேரத்தக்க கோயில் என்றார்.

சென்னை ராஜ்ய சிறு தொழில், வர்த்தகர் சம்மேளனம்

நிர்வாகக் கமிட்டியின் தீர்மானங்கள்

சென்னை ராஜ்ய சிறு தொழில் வர்த்தகர் சம்மேளனத்தின் காரியக்கமிட்டிக் கூட்டம் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் தலைமையில் திருச்சியில் நடைபெற்றது.

சமீபத்திய சென்னை மகாநாட்டுத் தீர்மானங்களையும், எதிர்கால வேலைத்திட்டங்களையும் விளக்கி கமிட்டியின் முன்பு தீர்மானங்கள் பலவற்றை பொதுக்காரியதரிசி, ஸ்ரீ. எஸ். சூரியநாராயணன் சமர்ப்பித்தார். விசேஷ அழைப்பின் பேரில் ஸ்ரீ. ஜி. அண்ணாமலை முத்து ராஜா எம். எல். ஏ., உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மகாநாட்டு தீர்மானங்களை விளக்கிக் கூறவும், சம்மேளன லட்சியங்களை வற்புறுத்தி நிவாரணம் பெறவும் தொழில் மந்திரியையும், முதன் மந்திரியையும் பேட்டிகாண தூது கோஷ்டி ஒன்றை அனுப்புவதெனவும், ஜில்லா வாரியாக சம்மேளன வேலைகளைத் துரிதப்படுத்துவதெனவும் கமிட்டிமுடிவு செய்தது.

வரவு செலவு கணக்குகளை அங்கீகரித்தும், காரியக் கமிட்டியை விஸ்தரிக்கவும், மேற்கொண்டு மெம்பர்களை நியமித்துக் கொள்ள தலைவருக்கு அதிகாரம் கொடுத்தும் மற்றும் சில தீர்மானங்களும் கமிட்டி நிறைவேற்றப்பட்டன.

என்ன பார்வை?

கௌரவ மிகுந்த மனிதன் கடைக்கண்ணால் பெண்ணைப் பார்க்கிறான். கொஞ்சம் கௌரவத்தை விட்டவர்கள் நேராகவே பெண்களைப் பார்க்கிறார்கள். கௌரவமே இல்லாதவர்கள் திரும்பத் திரும்ப ஏற இறங்கப் பார்க்கிறார்கள்.

—அறிஞர் ஷா.

உயர்ந்தரகம், உறுதியானவை

"திண்டுக்கல்"

ஸ்டீல் டிரங், சூட்கேஸ், கேபிள் ரகங்கள், வாளிகள், விவசாயக் கருவிகள், கீல் சட்டங்கள், இரும்பு கிராதிகள், நெல் அவியல் டாங்குகள், தண்ணீர் டாங்குகள், தங்களின் ஆர்டரின் பேரில், சுத்தமாக தயாரித்து கொடுக்கிறோம்.

M. கருப்பனன்,

சென்னை அரசினர் உதவி பெற்ற

லக்ஷ்மி டிரங்க் டிப்போ

99, மெயின் ரோடு,

திண்டுக்கல்.

600 008 144849

விஞ்ஞான முறையில் தோல் பதனிடுதல்

—✻—

டில்லியில் புதிய நிலையம் ஏற்படும்

தோல் உரித்தல், பதனிடுதல், இறந்த மிருகங்களின் மீதிப் பாகங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை சம்பந்தமான வேலைகளை விஞ்ஞான முறையில் செய்வதற்கு வேண்டிய பயிற்சியளிப்பதற்காக நிலையமொன்றை ஏற்படுத்தும் திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார்கள்.

நிலையம் டில்லியிலுள்ள தோல் தொழிலியல் கூட்டுறவு சங்கத்தில் ஏற்படுத்தப்படும் நிலையத்துக்கு ரூ 10, 000 மானியம் வழங்கப்படுகிறது.

தற்போது வருஷமொன்றுக்கு 20 பேர் கொண்ட மூன்று பிரிவுகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதமொன்றுக்கு ரூ 45 உதவித் தொகையாக வழங்கப்படும்.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த தோல் பதனிடும் நிபுணரான பி. எப். ஹெச். ஹொயக் இப்பயிற்சி-மேற்பார்வை வேலையைக் கவனித்து வருவார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கைத்தறித் துணி உற்பத்தியின் லட்சிய அளவு 220 கோடி கஜமாகும். அதாவது தற்போதைய உற்பத்தியை விட 70 கோடி கஜம் அதிகமாகும்.

Small Profits & Quick Returns

No order is too small or too great for us

QUALITY, QUANTITY GUARANTEED

MOFFUSSIL ORDERS PROMPTLY EXECUTED

A TRIAL WILL CONVINCE YOU

Manufacturers & Merchants of

Burmah Teakwood barrels & Tubs.

Suppliers to Govt. of Madras, Corporation of Madras, Municipalities and Local Boards.

Please contact:

V. DORAIKANNU & CO.,

Sole Prop: M. VENKATESAM CHETTIAR,

35, Wall Tax Road, Madras-3.

ராசி பலன்

ஸி. வெங்கட்ராமன்

செ	கே சு	சந்	சூ பு
	16—6—58 முதல் 30—6—58 வரை இராசி		
	சனி	ராகு வி	

மேஷம்

(அசுவனி பரணி கார்த்திகை ¼)

இந்த ராசியாதிபர்கட்கு பலாபலன்களை கவனிக்குமளவில் ராசியாதிபன் விரயஸ்தானத்தில் நின்றபடியால், பலம்பொருந்திய குரு பகவான் சப்தம ராசியில் ராகுவுடன் கலந்து நின்றபடியினுல் சூரியன் மூன்ரும் வீட்டிலு மிருப்பதிலும் யோகம், பணம், கீர்த்தி, சுகம் இவைகள் கூடுமானவரையில் சவுஜன்யமாக இருந்துவரும். சனி பகவான் நின்ற பலன்-சில சமயங்களில் வாழ்க்கை தரம் குடும்பம் அலைச்சல் வெளி பிரயாணங்கள் ஏற்படலாம். திசாபுத்திகள் பலம் பொருந்தி நடக்கக் கூடியவர்கட்குக் குடும்பத்தில் விவாகம், சுபவிரயம், யாத்திரை முதலிய மங்கல செய்திகள் நடக்கவும் ஏதுவாகும். சினிமா, சங்கீதம் தொழில் செய்யும் நேயர்கட்கு உல்லாசமாக வெளியூர் பிரயாணம், வாழ்க்கைத் தரம் உயர்வும் உண்டாகும். நல்ல நாட்கள்: 17, 18, 19, 24, 25, 26. கெட்ட நாட்கள்: 28, 29, 30.

ரிஷபம்

(கார்த்திகை ¾ ரோகிணி 1 மிருகஷீரிஷம் ½)

இந்த ராசியின் நண்பர்களை கவனிக்கும் நிலைமையில் செவ்வாய் பலமாக லாபஸ்தானத்தில் நின்றதில் சினிமா, சங்கீதம் தொழில் உத்யோகம் செய்கிற ராசிக்காரருக்கு ஓர் அளவு புகழ் கீர்த்தி, பண விவகாரங்கள் அளவுக்கு கட்டுபடாத நிலை வரும். சுகம், கஷ்டம் கலந்து அனுபவமாக வரும். குரு ராகு பலமாக சத்ரு வீட்டிலிருப்பதினுலும் வீண் வழக்கு விவகாரங்கள் தொல்லை இவைகள் லேசாக மறைமுகமாகவே ஏற்படும். ஆனுலும் திசாபுத்திகள் பலமாக இருக்கிறவர்கட்கு சகல வழிகளிலும் ஒற்றுமையாக இருப்பினும் கலகம் ஏற்பட்டு ஓர் அளவு சவுஜன்யம், சவுகரியம் அமைதிகள் ஏற்படும். வெளிபிரயாணம் வார முன் ஆரம்பத்தில் ஏற்படும். நல்ல நாட்கள்: 20, 21, 26, 27. கெட்ட நாட்கள்: 29, 30.

மிதுனம்

(மிருகசீரிஷம் ½ திருவாதிரை புனர்பூசம் ¾)

இந்த ராசிக்காரர்கள் நிலைமை் கவனிக்குமளவில் சகல கிரகங்களின் சூழ் நிலைமை ரொம்பவும் திருப்திகரமாக இருக்கிறது. சினிமா, சங்கீதம், உத்யோகம், தொழில் வர்த்தகம் செய்யும் ராசிக்காரருக்கு லாபகரமாகவும் பெரிய மனுஷாள், புதிய சினேகிதம் அவர்களால் உதவியும் புண்ய தீர்த்த யாத்திரை வாகன யோகம், விவாகம், சுப விரயம் ஏற்படும். உறவினர்கட்கு உடனிருந்து மங்களகரமான சுப விவகாரங்கள் செய்து வைத்தல். அதனுல் ஆருதல் மனம் அமைதியடைதல் இவைகள் உண்டாகும். குழந்தைகட்கு பொன் பூஷணம், பட்டு வஸ்திரம் வாங்கிக் கொடுத்து சந்தோஷமாக குடும்பம் நடைபெறுவதற்கு சாதகமான சூழ்நிலை நிகழும். நல்ல நாட்கள்: 22, 23, 28, 29, 30. கெட்ட நாட்கள்: 24, 25.

கடகம்

(புனர்பூசம் ¼ பூசம் 1 ஆயில்யம் 1)

இந்த ராசிக்காரர்களின் வாழ்க்கை நிலைமையை யோசிக்கும் நிலைமையில் சுகம் சவுகரியம் சுமுகமாக வாழ்க்கை தரம் நடத்த கொஞ்ச காலம் பொருத்திருக்க வேண்டும். சினிமா, சங்கீதம், உத்யோகம், தொழில் வர்த்தகம் செய்யும் நண்பர்கட்கு சுகமும் கஷ்டமும் வாழ்க்கையில் கலந்தே வாழ நேரிடும். பண விவகாரங்கள் வருவாய்க்கு மேல் சிலவு அதிகரித்து கடன் வாங்கவும் வரும். கட்டுபாட்டுடன் வாழ்க்கைத் தரம் நடத்த முடி

யாது. தொழில் வர்த்தகம் செய்யும் ராசிக்காரருக்கு கடன் வாங்கி நாணயமாக தொழில் செய்ய ஈடுபடும்படி ஏற்படும். பலமாக திசா புத்தி நடக்கக் கூடியவர்கட்கு சவுகரிமான வழியில் சகலமும் திறம்பட சவுகரிய்மாக நடந்து வரும். நல்ல நாட்கள்:—24, 25, 26. கெட்ட நாட்கள்: 27, 28.

சிம்மம்

(மகம் பூரம் உத்திரம் ¼)

இந்த ராசியாதிபர்களின் தரம் ராசியதிபன் லாபஸ்தானத்தில் நின்றது பலம் பொருந்திய குரு திருஷ்டியில் விளங்கியதில் சினிமா, சங்கீதம், வர்த்தகம், உத்யோகம், தொழில் செய்பவர்களுக்கு சவுகரியமாகவும் சுகமாகவும் வாழ்க்கை சரிபோகும். சில சமயங்களில் சனி, செவ்வாய் கிரக அமைப்பு சரி இல்லாதபடியினால் வீண் மனஸ்தாபம் மறைமுகமாக விரோதம் வழக்குகள் இவைகள் கொஞ்சம் தோன்றி நிவர்த்தியாகும். மன அமைதி வராது. திசா பலன் பலமாக இருப்பின் சகல துறையிலும் வெற்றியும் சந்துருஷ்டியும் லாபகரமாக வாழ்வதற்கு சரி போகும். நல்ல நாட்கள்: 17, 18, 19. கெட்ட நாட்கள்: 27, 28.

கன்னி

(உத்திரம் ¾ அஸ்தம் சித்திரை ½)

இந்த ராசிக்காரருக்கு கவனிக்குமளவில் குரு, ராகு, சனி, பலமாக இருந்தும் பாபருகிய செவ்வாய் சப்தமமான வீட்டில் இருப்பதில் வாழ்க்கையில் எவ்வளவு சவுகரியம் சுகம் சந்துருஷ்டி ஏற்பட்டாலும் அடிக்கடி மனம் சின்ன விவகாரங்களில் அதிருப்தியும் கவலைக்கிடமான கஷ்டங்களும் கலந்து அனுபவிக்க வரும். சினிமா, சங்கீதம், வர்த்தகம், உத்யோகம், தொழில் செய்யும் ராசிக்காரர்கட்கும் திசாபுத்திகள் பலமாக நடக்கும் ராசிகாரருக்கும் சகலவித வழியிலும் எல்லாவிதங்களிலும் கீர்த்தி, புகழ், சந்தோஷமாக வாழ்வதற்கு சரிவரும். கூடுமான வரையில் நவக்கிரக சாந்தி செவ்வாய் கிரகத்திற்கு தீபம் போட்டு வழிபடுதல் நலம். துயரம் பகைமை குறையும். நல்ல நாட்கள்: 19, 20, 21, 29, 30 கெட்ட நாட்கள்: 22, 23.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾)

இந்த ராசிக்காரர்களின் கிரக யோக நிலைமை கவனிக்குமளவில் செவ்வாய் பலமாகவும் இருப்பதினாலும் சங்கீதம், சினிமா உத்யோகம் தொழில் செய்யும் நேயர்கட்கு சுகமும் கஷ்டமும் கலந்து கலந்து வந்தாலும் செவ்வாய் பலத்தினால் சகலமும் தைரியமும் புகழ், கீர்த்தியுடன் வாழ்க்கை தரம் நடத்துவதற்கு சரிபோகும். குடும்பத்தில் பந்துகட்கு சுப மங்களகரமான வழியில் சிலவு செய்து வைக்கவும், வெளியூர் பிரயாணங்களும் உண்டாகும். வீடு கட்டடம் இடம் மாறுதல் அதனால் சிலர் அல்லல்கள் உண்டாகும். முடிவில் சகலமும் சுபமாக முடிவுபெறும். நல்ல நாட்கள்: 21, 22, 23. கெட்ட நாட்கள்: 16, 17.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசிக்காரர்களை கவனிக்கும் நிலைமையில் கிரக நிலைமையில் சாதகமான நிலவரமாக சொல்வதற்கில்லை. எல்லா கிரகங்களும் கவலையை தரும் நிலவரத்தில் கிரக நிலை அமைந்திருக்கிறது. சினிமா, சங்கீதம், தொழில், உத்யோகம் செய்யும் ராசியாதிபர்கட்கு சுகம், கஷ்டம், துக்கம் கலந்தே வாழவரும். திசாபுத்திகள் பலமாக யோகமாகவும் நடக்கும். ராசியாதிபர்கட்கு சகல வழியிலும் சவுகரியமாக வாழ்க்கை தரம் சரிவரும். திசா புத்தி சரியில்லாவிடில் சகல வழியிலும் கோள், கலகம், விரோதம், ராஜாங்கம் கோர்ட்டு வழக்குகளில் ஈடுபடவும் உண்டாகும். கூடுமான வரையில் நவக்கிரகங்களை வழிபடுதல், தீபம் போடுதலினால் கஷ்டம் தொந்திரவு நிவர்த்தியாகும். பெருமகிழ்கிக்கு சாதகமாக அனுகூலம் வாய்ப்பு ஏற்படும். நல்ல நாட்கள் 24, 25, 26. கெட்ட நாட்கள்: 17, 18.

தனுசு

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசியாதிபர்களின் நிலையை பார்க்குமளவில் வார ஆரம்பமுதல் நாள் அதிக சந்தோஷ தினங்களாக அனுபவிக்க வரும். அதனால் வருமானம், புகழ் உண்டாகும்,

குடும்பத்தில் பெரியோர்கள் உதவி சன்மானம் இவைகள் எதிர்பாருதவகையில் கிடைக்க சரிவரும். கவர்மெண்ட் உத்யோகம் செய்யும் ராசிக்காரர்கட்கு சம்பள உயர்வு பிரயாணம் இடம் மாருதல் எதிர்பார்க்கலாம். சித்தியாகும்.பணம், பட்டம் பதவிகள், புகழ் கலையில் தேர்ச்சி பெற்றவர்கட்கு கிடைக்க ஏதுவாகும். சுப விசேஷ மங்களகரமான சில வினங்கள் எதிர்பாராதவகையில் தர்ம்முன்னதாக ஏற்று செய்ய வரும். நல்ல நாட்கள்: 16 17, 26, 27. கெட்ட நாட்கள். 19, 20, 21.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம் 1 அவிட்டம் ½)

இந்த ராசியாதிபர்களின் நிலைமையில் கிரகநிலை கூடியவரையில் நல்ல யோக அம்சமான ரீதியில் அமைந்திருக்கிறபடியினுல் சினிமா, சங்கீதம், உத்யோகம், தொழில் செய்யும் நண்பர்கட்கு புகழ், கீர்த்தி, வெளி வட்டாரங்கள் புதியய சினேகிதம் அவர்கள் ஆதரவினுல் பணம் லாபம்,சன்மானம் இவைகள் திடும்பிரவேசமாக அடைவதற்கு பிராப்தம் உண்டாகும். தவிரவும் கிரக நிலை சந்திரன் சஞ்சரிக்கும் நிலை ஆரம்ப நாள் இரண்டு தினத்திற்குமேல் வெளி விவகாரங்கள் நண்பர்கள் உதவியின் லாபகரமாக சூழ் நிலையில் அமைந்திருக்கிறது. வீட்டில் மங்களகரமான விரயம், சிலவு செய்யவும், பிரயாணம் உல்லாசமாக வாழ்க்கையில் போக்கு வரவுகளும் உண்டாகும். பிள்ளைகட்கு விவாகம் செய்வித்தல் அதனுல் திருப்திகரமாக சந்தோஷ மகிழ்ச்சி யடைவதற்கு சரிவரும். சம்பள உயர்வு, பூஷணம், ஆபரணம் இவைகள் வாங்கி அனுபவிக்க சவுகரியம் ஏற்படும். நல்ல நாட்கள்: 17, 18, 19, 29, 30. கெட்ட நாட்கள்: 22, 23.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் பூரட்டாதி ¾)

இந்த ராசியாதிபன் பலமாக சஞ்சரிப்பதில் வக்ரகதியிலிருப்பதில் இந்த ராசிக்காரர்கட்கு சங்கீதம், தொழில், உத்யோகம்,கார் வர்த்தகம் செய்யும் நண்பர்களுக்கு கூடியவரையில் சுகம், சந்தோஷம் அடைவதில் கஷ்டம் ஓர் அளவு சிலசமயம் ஏற்பட்டு நிவர்த்தியாகும். குரு பலமாக இருப்பதில் வெளி வட்டாரங்களில் போகவரவும் வியாபாரிகட்கு செய்யும் தொழிலில் லாபகரமும் ஏற்படும். ஆனுல் மன அமைதி யடையவராது. பிளனணியில் மறைமுகமாக கலகம், கோள், விரோதம் இவைகள் ஏற்படும்.முடிவில் ஆனுல் நன்மையாகவே எதிர்பாக்க நேரிடும். சிலசமயம் உத்யோகம் செய்யும் ராசியாதிபர்கட்கு அதிகாரிகள் கோபத்திற்கு ஆளாக ஏற்படும். இடம் மாற்றி ஸ்தான பேதம் ஏற்படும். சுகமும் கஷ்டமும் கலந்தே அனுபவிக்க வரும். குடும்பத்தில் சுப சிலவினங்கள் செய்ய ஏதுவாகும். நல்ல நாட்கள்: 19, 20, 21. கெட்ட நாட்கள்: 24. 25, 26.

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசிக்காரர்கட்கு தற்சமயம் ராசியாதிபனைக் கொண்டு பலன்சொல்லுமளவில் நல்லமாதிரி யோகமாக சொல்ல நியாயமில்லை சூரியன், புதன், சுக்ரன் இவர்கள் போக்குவரவில் ஓர் அளவு சந்தோஷம் அமைதியாக இருக்கவரும். சங்கீதம், கார், உத்யோகம் ஜீவனம், தொழில் செய்கிரவர்கட்கு ஜீவனம் செய்ய திருப்திவராது. அதிகாரிகள் கோபம் பகைமை இவைகட்கு பாத்திரமாக விளங்க வரும். ஆயினும் சமயோசித புத்தியின் சாமர்த்தியத்தினுல் பக்குவமாய் மௌனமாக இருப்பது உசிதம். ஆயினும் சினிமா சங்கீதம் செய்யும் நண்பர்களுக்கு வெளி பிரயாணங்கள் உண்டாகும். அரசியல் ஈடுபடும் நபர்கட்கு உல்லாசமாக பிரயாணம் குளிர்ச்சியான வாசம் வாழ்வதற்கு பலன் உண்டாகும் தொழில் ஜீவனம் செய்பவர்கள் கஷ்டம்சுகம் கலந்து அனுபவிக்க சரிவரும். நவக்கிரகம் சாந்தி வழிபடுதல் சாத்மீகமாக நன்மை அடையசரிவரும். நல்ல நாட்கள்:23, 24, 25. கெட்ட நாட்கள்: 26, 27, 28. சுபமஸ்து.

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

விமர்சனம் :

பிள்ளைக்கனி அமுது

பி. எஸ். வி. பிக்சர்ஸார், 'பிள்ளைக்கனி அமுது' என்ற அழகான பெயரில் தயாரித்துள்ள தமது முதல் படத்திலேயே சாதாரண நடிகை நடிகர்களுடனேயே படம் எடுத்திருக்கின்றனர்; பாராட்ட வேண்டிய முயற்சி!

பெரும் பணக்காரரான சச்சிதானந்தம் பிள்ளை வீட்டில் முதலாளியின்காரில் தன் காதலியைப் பார்த்து சந்தேகம் கொள்கிறான் முருகன். புலி வாயில் இருந்து நாட்டியக்காரியான மோகனாவைக் காப்பாற்றும் போது ஏற்பட்ட ஒரு சூழ்நிலையை வைத்து முருகன் மேல்சந்தேகம் கொள்கிறாள் முத்தம்மாள். சந்தேகக் காட்சிகள் அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளன.

படம் பார்ப்போர் பரிவு கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தானோ, என்னவோ ராஜேந்திரனை ஒரு சிறு பையனுடன் காட்டிலும் மேட்டிலும் அலையவிட்டிருக்கின்றனர்; கொஞ்சம் அலைச்சலைக் குறைத்திருக்கலாம். கார் விபத்தில் கண்கள் மட்டும் குருடாவது விந்தைதான். கண்ணைக் குருடாக்க வேறு வழியைப் பயன் படுத்தி இருந்திருக்கலாம் டைரக்டர்.

கண்களை இழந்து தவிக்கும் போது ராஜேந்திரன் நன்றாக நடித்திருக்கிறார். ஆனால் அவர் சாகப் போவதாகச் சொல்லி ஒரு குட்டையின் முன்னால் நின்று வசனம் பேசும்போது அலுப் பேற்படுகிறது. அப்போதெல்லாம் உதவி செய்ய யாரும் முன் வரவில்லை! அவர் குட்டையில் விழுந்த மறுகணமே சொல்லி வைத்தாற்போல நாலைந்து பேர் வந்து அவரை தூக்கும் காட்சியைப் பார்க்கும்போது, அது டைரக்டர் இல்லாமலே எடுத்தது போல் இருக்கிறது! திருமுகம் ஒரு சிறந்த எடிட்டர்! அவருடைய டைரக்ஷனில் சிறு தவறுகள் இருப்பது வியப்பளிக்கிறது.

வழக்கம்போல் வீரப்பா கதாபாதகனாகவே வருகிறார். குறை சொல்ல இடமின்றி நடித்திருக்கிறார்!

இளம் இதயங்களைக் கவர்ந்துள்ள இ. வி. சரோஜா முத்தம்மாளாக நடித்துள்ளார். பருவமங்கையாக இருந்தும் குரல் இன்னும் 'பாப்பா' குரலாகவே இருக்கிறது. முதல் படமாகையால் அவருடைய குறைகள் மனதில் நிற்கவில்லை. வரும் படங்களில் அவர் நடிப்பு வளரும் என்று திடமாக நம்பலாம்.

நாட்டியக்காரியாக ராஜம் வருகிறார். நடிப்பில் 'முற்றிய தேங்காய்' மாதிரி இனிக்கிறார்!

பாட்டுக்கள் அத்தனையுமே கனியும் அமுதமும் போல் இனிக்கின்றன "ஏர்முனைக்கு நேர்!" "பிள்ளைக்கனியமுது" "ஒண்ணு பிறந்திட வேணும்" போன்ற பாட்டுகள் கேட்கக்கேட்க இனிமையாக இருக்கின்றன. ஒளிப்பதிவு நன்றாக இருக்கிறது. 'ஓடுகிற தண்ணியிலே!' என்ற பாட்டின்போது படப்பிடிப்பு கண்ணுக்கு குளுமையாக இருக்கிறது. ஆனால் ஒலிப்பதிவாளர் இந்தக் கட்டத்தில் பழி வாங்கிவிட்டார்! வீரப்பாவின் முதல் முயற்சியான "பிள்ளைக்கனியமுது" கண்ணுக்கும், காதுக்கும் தனி அமுதாகும். அவருடைய அடுத்த தயாரிப்பு பேசும் பொற் சித்திரமாக அமையுமென நம்புவோமாக!

சோ. க.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.